Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி– 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 சஃபான் 04 (09.09.2005) வெள்ளிக்கிழமை இதழ்:344


அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

# கட்டுநாயக்கவில் பேச்சு நடத்தும் யோசனையை புலிகள் நிராகரிப்பு!

## தமிழ்ச்செல்வன் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு


கிளிநொச்சி —

தென்னிலங்கையில் அரசியல் குழப்பங்களும் பதற்றமான சூழலும் நிலவுவதால், இயல்பான நிலையில் பேச்சுக்களை முன்னெடுக்க முடியாது என்பதால் - கட்டுநாயக்க விமானநிலையத்தில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான பேச்சுக்களை நடத்தும் நோர்வே அரசின் யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் மற்றும் நோர்வே தூதரகப் பிரதிநிதிகளுடனான (11 ஆம் பக்கம் பார்க்க)



## கண்காணிப்புக்குழு தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!



கிளிநொச்சி —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் மற்றும் நோர்வே பிரதித் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் விமானப்படை ஹெலி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த இந்தக் குழுவினரை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற எஸ்.ரி.எவ் மீது தாழங்குடாவில் தாக்குதல்!

### இரண்டு பேர் பலி; ஆறு பேர் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கல்முனை வீதியிலுள்ள தாழங்குடா என்ற இடத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இரண்டு விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் 5 விசேட அதிரடிப் படையினரும் 5 பொதுமக்களும் காயமடைந்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மண்முனை விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்றுமாலை 8 விசேட அதிரடிப்படையினரும் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் தாழங்குடா முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டு ரோந்து அணிமீது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் - மாரியம்மன் கோவில் வீதியில் வைத்து கிரனேட் மற்றும் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த எம்.எஸ்.சந்தன (வயது 30), எம்.எல்.அமரசிங்க (வயது 32) ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் 5 விசேட அதிரடிப்படையினரும் காயமடைந்தனர். ஆர்.விஜேசுந்தர (35), ரூபசிங்க (33), றொசாந்த (30), கரீஸ் (32), குலசேகர (30) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு - மேலதிக சிகிச்சைக்காக விமானம் மூலம் பொலநறுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய இரு இளைஞர்களும் தப்பிச்சென்றுவிட்ட நிலையில் - அப்பகுதிக்கு வந்த படையினர் நடத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரை சுட்டுவிட்டுத் தப்ப முயன்ற கருணா குழு உறுப்பினர் பொலிஸாரின் சூட்டுக்கு பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரில் இருதயபுரம் பஸ் டிப்போவுக்கு அருகில் இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த இளைஞரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பு பஸ் டிப்போவுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருதயபுரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழு உறுப்பினர் பொலிஸாரின் சூட்டுக்கு பலி!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு நகரில் இருதயபுரம் பஸ் டிப்போவுக்கு அருகில் இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த இளைஞரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பு பஸ் டிப்போவுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருதயபுரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

யிலுள்ள தாழங்குடா என்ற இடத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இரண்டு விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் 5 விசேட அதிரடிப் படையினரும் 5 பொதுமக்களும் காயமடைந்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மண்முனை விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்றுமாலை 8 விசேட அதிரடிப்படையினரும் ஒரு

ருந்தனர்.

இந்தக் கூட்டு ரோந்து அணிமீது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் - மாரியம்மன் கோவில் வீதியில் வைத்து கிரனேட் மற்றும் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த எம்.எஸ்.சந்தன (வயது 30), எம்.எல்.அமரசிங்க (வயது 32) ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் ஒரு பொலிஸ் கொன்ஸ்

சுந்தர (35), ரூபசிங்க (33), றொசாந்த (30), கரீஸ் (32), குலசேகர (30) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு - மேலதிக சிகிச்சைக்காக விமானம் மூலம் பொலநறுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய இரு இளைஞர்களும் தப்பிச்சென்றுவிட்ட நிலையில் - அப்பகுதிக்கு வந்த படையினர் நடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விமானத்தில் குண்டுப் புரளி நெரிசலில் சிக்கி பெண் பலி!

## 75 பயணிகள் வரை காயம்



கொழும்பு—

கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் சவுதி நோக்கிச் செல்லவிருந்த விமானத்தில் குண்டு இருப்பதாக புரளி கிளம்பியதை அடுத்து - பயணிகள் அவசரமாக முண்டியடித்துக்கொண்டு கீழிறங்கிய போது ஏற்பட்ட நெரிசலில் பெண் ஒருவர் பலியானார் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோ, ரோக்கியோ பிரகடனத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்கிறாரா?

## கேள்வியெழுப்புகிறது ஐ.தே.க

கொழும்பு—


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்ட ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ பிரகடனங்களுக்கு ஏற்ப மஹிந்த ராஜபக்ஷ சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வாரா இல்லையா என்பதை சுதந்திரக் கட்சி வேட்பாளர் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.


இது தொடர்பாக கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கருத்துத் தெரிவிக்கையில்—

மஹிந்தராஜபக்ஷவுக்கும் (12 ஆம்பக்கம்பார்க்க)

## 12 நிபந்தனைகளை ஏற்று

# மஹிந்த ராஜபக்ஷ-ஜே.வி.பி. உடன்படிக்கை கைச்சாத்து!






கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான 12 அம்ச இணக்கப்பாட்டுடன் கூடிய உடன்படிக்கை நேற்று அலரிமாளிகையில் கைச்சாத்தானது.

நேற்றுப் பகல் 11 மணியளவில் அலரிமாளிகையில் மத வழிபாட்டுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது. மதவழிபாட்டை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், ஜே.வி.பியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் பகல் 11.57 மணிக்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர்க ளான அனுரா பண்டாரநாயக்க, சுசில் பிரேம் ஜயந்த, மங்கள சமரவீர, தினேஸ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, பேரியல் அஷ்ரப் ஆகியோரும், ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, விமல் வீரவன்ச, நந்தன குணதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றைய இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதை முன்னிட்டு அலரிமாளிகையைச் சூழவுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

EXPOAIR

Your friend in the skies...

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# கல்விப் பணிப்பாளர்களுடன் 16ஆம் திகதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது குறித்த நடைமுறைகள், அதிபர், ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள், நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 45 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் -

எனவே, இந்த முறைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆலயங்களில் திருட்டு

வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வர கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை இரவு ஆலயக் கதவு உடைக்கப்பட்டு மூலஸ்தானத்திலிருந்த சிவன், தெற்கு வாசலில் இருக்கும் மீனாட்சி அம்மன் விக்கிரகங்கள் அகழப்பட்டு இயந்திரத் தகடுகள் களவாடப்பட்டுள்ளன.

அத்துடன் ஆலயத்தின் உண்டியலை உடைத்து பணமும், ஆலயத்திலிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களுக்குரிய வானொலிகளும் களவாடப்பட்டுள்ளன.

இதேவேளை - அன்றைய தினம் இரவு வட்டுக்கோட்டை பங்குரு முருகன் ஆலயத்திலும் திருட்டுப் போயுள்ளதாகத் தெரியவருகிறது.

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு திருகோணமலையிலுள்ள வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆசிரியர்களுக்கான நிலுவைச் சம்பளம், பதவி உயர்வு மற்றும் ஆசிரிய நியமனம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவுள்ளதாக, தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

## லொறிச் சாரதிக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்

ஸ்ரான்லி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தின்போது குடும்பஸ்தர் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய லொறிச் சாரதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர் நேற்று யாழ். மாவட்ட மேலதிகநீதிவான் சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

சந்தேக நபர் சார்பாகப் பிணை அனுமதி கோரியபோதும் பொலிஸார் அதனை ஆட்சேபித்ததால் அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

## க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள்

*மானிப்பாய் மகளிர் கல்லூரி*

*வர்த்தகப் பிரிவு*

ராதிகா சிவதாசன் - 3A(மாவட்ட நிலை - 4)

*கலைப் பிரிவு*

கஜேந்தினி இராஜரட்ணம் - 2A, B, சுஜித்தா வரதராஜா - 2A,C, பவித்ரா தயாபரன் - A,B,C, ஜனனி பாலசுப்பிரமணியம் -A,B,C.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்

வண்ணை - சாந்தையர்மடம் - ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற்றுவரும் இந்த உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் நிறைவடையும்.

## விளக்கவுரைக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தமிழீழ அரசை அங்கீகரிக்கக்கோரும் பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனத்தின் முன்னோடிச் செயற்பாடாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மக்களுக்கான விளக்கவுரைகளை வழங்கி வருகின்றனர்.

இந்த வகையில் நேற்றைய தினம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் பாடசாலைகளிலும் விளக்கக் கூட்டங்களும், கருத்துப் பகிர்வுகளும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்டன.

## களப் பயிற்சி

யாழ்ப்பாணம்

செயல்திறன் அரங்க இயக்கம் நாடக மன்றங்களை வளப்படுத்தும் திட்டங்களில் ஈடுபட்டுவருகிறது. இதன் ஒரு பகுதியாக வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட நாடக மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கான களப் பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் களப் பயிற்சி கரவெட்டிப் பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளையும், நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் களப் பயிற்சியில் நடிகர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள், நாடக எழுத்துருப் படைப்பாக்கம், நாடக நெறியாள்கை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.


## சிறு விளம்பரம்

இலவச பொருட்களுடன் இப்போது கிடைக்கிறது! தமிழ் ஓசை மக்கள் இதழ். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் பொத்தகசாலை, யாழ்ப்பாணம். இது தமிழரின் ஓசை! (2041)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
கார்த்திக், ரோஜா, கௌசல்யா, விவேக் மற்றும் பலர் நடித்த
**சந்தித்த வேளை**

**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு!
*இன்று முதல்*
சிம்பு, கோபிகா மற்றும்பலர் நடித்த
**தொட்டி ஜெயா**
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்
சுரேஸ்கோபி, மஞ்சு,விஜய்மேனன், விமல்ராஜ் மற்றும் பலர் நடித்த
**பத்ரம்**
விரைவில்... சூர்யா, அஸின் **கஜினி**
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
விக்ரம், சதா,விவேக் மற்றும் பலர் நடித்த
**அந்நியன்**

11 முதல்...!
**பொன்னியின் செல்வன்**
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சத்தியராஜ், வடிவேலு, நமீதா, மற்றும் பலர் நடித்த
**இங்கிலீஸ்காரன்**
காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

## நமது ஈழநாடு

### மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

**மேற் பிரிவு**

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

**மத்திய பிரிவு**

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.

## ஹற்றன் நஷனல் வங்கி

HATTON NATIONAL BANK LIMITED

யாழ்ப்பாணம்

### அடகுப் பொருட்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளையில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!**

நீங்கள் பெற்றுள்ள அடகு கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒருவருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதனை மீண்டும் அறியத்தருகின்றோம்.

தங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால், கடனுக்குரிய வட்டியையும், கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதி திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்துக்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க/காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் 01-10-2005 சனிக்கிழமை ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

(C/4574) - முகாமையாளர்

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 10 - 11 - 1938



இறப்பு: 24 - 08 - 2001

**திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை**

திதி :- ஷஷ்டி 09-09-2005

அம்மா! ஆண்டு நான்கு ஆனாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகலாது.
உங்கள் அன்புக்காக ஏங்கித் தவிக்கும்...!

*80, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.*

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(2042)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 03 - 1939



இறப்பு 20 - 09 - 2004

**அமரர் சண்முகம் லோகேஸ்வரன்**

திதி - ஷஷ்டி

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகளானாலும்
நெஞ்சிலே நின் அன்பை மறவா நினைவுகளை
நித்தமும் எண்ணி எண்ணி உருகுகின்றோம் - நாமிங்கே.

டச்சு றோட், சித்தங்கேணி.

உங்கள் பிரிவால் துயருறும்,
மைத்துனன் - வே.பொன்னம்பலம்.

!2040T

# அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமே தனிநாட்டு பிரச்சினையை தீர்க்கலாம்!

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் சந்திரிகா



கொழும்பு —

அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளாமல் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஒருபோதும் முடிவு காணமுடியாது. அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இந்த நாட்டில் வாழும் 70 சதவீதமான மக்கள் சமாதானத் தீர்வையே விரும்புகின்றனர் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் 54 ஆவது மாநாட்டுக்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனை ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது இன்றும் மீளப்பெறப்படவில்லை. தேவை ஏற்படின் தமிழ், முஸ்லிம் மற்றும் தென்னிலங்கைக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி திருத்தங்களுடன் அதனை முன்னெடுத்துச் செல்லலாம்.

இது தொடர்பாக அனைத்துக் கட்சிகளினதும் நூற்றுக்கு நூறு அங்கீகாரம் கிடைக்கப்போவதில்லை. ஆனால், பெரும்பான்மை ஆதரவுடன் இந்த யோசனையை முன்னெடுத்துச் செல்லலாம்.

கடந்த 11 வருடங்களாக நாட்டின் தலைவியாக இருந்து பல பதவிகளை வகித்த நான், இன்னும் இரண்டு மாதங்களில் பதவியைத் துறந்து அரசியலில் இருந்து விலகிவிடுவேன். ஆனால், பலரின் வேண்டுகோளுக்கமைய சுதந்திரக் கட்சியின் தலைவியாகத் தொடர்ந்தும் இருப்பேன்.

நான் அரசியலில் எதையும் சம்பாதித்துக் கொள்ளவில்லை. எனது சம்பளத்தைக்கூட அதிகரித்துக் கொள்ளவில்லை. ஓய்வூதியத்தையும் வேண்டாமெனக் கூறிவிட்டேன். எனினும், எனது பாதுகாப்பைக் கருதி, வீடு அமைத்துக்கொள்ள காணித்துண்டொன்றைப் பெறமுயன்றேன். அதற்கு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

அரசியலுக்கு வந்த பின்னர் எமக்குச் சொந்தமான பல ஏக்கர் காணியை நாம் பொதுமக்களுக்கு வழங்கினோம்.

அப்படிச்செய்த நான், எனது பாதுகாப்புக்காக வீடொன்றை அமைக்க இரண்டரை ஏக்கர் காணியைப் பெறுவது நியாயமற்றதா?

அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதில் எனக்கு எவ்வித கவலையும் இல்லை. நான் ஓய்வுபெற்றுச் செல்லும்போது தலை நிமிர்ந்து செல்வேன் எனத் தெரிவித்தார்.



நான்குநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஐ.நா.சபையின் சிறப்புத் தூதுவர் லக்டா பிரஹமியை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# ஜே.வி.பி.-ஹெல உறுமய நிபந்தனைகள்; கூட்டணிக் கட்சிகள் கடும் அதிருப்தி!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டணிக் கட்சிகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடிப்பது அவசியமாக இருந்தாலும் இனவாதக் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது தவறானது என்று அந்தக் கட்சிகள் கருவதுதாகத் தெரிகிறது.

இது குறித்து மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்த கூட்டணிக் கட்சித் தலைவர்கள் - ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவின் சுனாமி பொதுக் கட்டமைப்பு முடக்கம் உட்பட 12 நிபந்தனைகள் குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்த இனவாதக் கட்சிகளின் நிபந்தனைகளையும் அந்தக் கட்சித் தலைவர்கள் நிராகரித்தனர்.

இதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ -

ஊடகங்களில் இவை தொடர்பாக வெளியாகும் செய்திகள் தவறானவை என்று கூறினார்.

சுனாமி பொதுக்கட்டமைப்பு என்பது தற்காலிகமானதுதான். அதை முடக்குவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். பொதுக் கட்டமைப்பை செயற்பாடுள்ள தாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து பேச்சுகளை நடத்துவதற்கும் கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் மகிந்த ரரஜபக்ஷ ஒப்புக்கொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் நாடு நிச்சயம் யுத்தத்தைச் சந்திக்கும்

## விக்கிரமபாகு கருணாரட்ன கூறுகிறார்



கொழும்பு —

ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய உதவியுடன் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் நாடு மீண்டும் யுத்தத்தைச்சந்திக்கவேண்டி இருக்கும் என்று - புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொண்டர்களின் தோளில் ஏறிக்கொண்டு ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய பேரினவாதிகளின் பொது வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ உருவெடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்ட பாதைகளிலிருந்து முற்றிலுமாக நீர்த்து வேறு பாதையில் மகிந்த ராஜபக்ஷ பயணமாகிவருகிறார்.

நாட்டின் ஜனநாயக சக்திகளும், உண்மையான இடதுசாரிகளும் மகிந்த ராஜபக்ஷவின் யுத்தத்தை நோக்கிய இந்த நடவடிக்கைக்கு ஒருபோதும் உதவியாக இருக்கமாட்டார்கள். அவர் தனக்குத்தானே குழி பறித்துக்கொள்கிறார்.

ஏகாதிபத்திய சக்திகள் நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும் நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார்.

நோர்வே அனுசரணையாளர்கள வெளியேறவேண்டும் என்பதை புதிய இடதுசாரி முன்னணி ஏற்றுக்கொள்கிறது. இருப்பினும் வெளிநாட்டு சக்திகளின் தலையீடின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு நேரடிப் பேச்சுகளை நடத்தவேண்டும்.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை மேற்கொண்டால், இங்கே இரு தேசங்கள் இருப்பதை அவர் ஏற்றுக்கொள்வதாகவே அர்த்தம். அதுவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்துக்கு வழிவகுக்கும்.

சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடவில்லை. இனவெறியர்களின் பிரதிநிதியாகவே அவர் போட்டியிடுகிறார் என அவர் கூறியுள்ளார்.

# தென்பகுதி மதகுருமார் இளந்திரையனுடன் சந்திப்பு!



மட்டக்களப்பு —

பௌத்தபிக்கு மற்றும் கிறிஸ்தவ மதகுருமாரைக் கொண்ட குழுவினர்மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொக்கட்டிச் சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் -

தற்போதுள்ள போர்நிறுத்த சூழல் நம்பிக்கையற்று வருவதுடன், தோன்றிவரும் நெருக்கடி நிலை குறித்தும் மதகுருமார்களுக்கு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்புக் குறித்து இளந்திரையன் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல எனவும் -

அது தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம் என்பதை தென்னிலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்துமாறும் மதகுருமார்களிடம் கேட்டுக்கொண்டோம்.


அத்துடன், இன்றைய சமாதானச் சூழல் ஆபத்தான நிலைக்குச் செல்வதற்கு அரசபடையினரது அவர்களோடுள்ள ஒட்டுப் படைகளின் செயற்பாடுகளே காரணம் எனவும் தெளிவுபடுத்தியதுடன், இதனையும் தென்னிலங்கை சமூகத்திற்கு எடுத்துரைக்குமாறும் கோரியுள்ளோம்.

இந்தச் சந்திப்பில் மகாவலி மகாவிகாரையின் பீடாதிபதி சங்கைக்குரிய விஜிததேரர், இலங்கை திருச்சபையின் மலையக - ஊவா - கிழக்கு மாகாண பொறுப்பாளர் அருட்திரு டிலுராஜ் கனகசபை அடிகள், அருட்திரு ஜோசப்மேரி அடிகளார், இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு சந்திரன் கிறிஸ்தோபர், மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஏ.ஆர்.மகேந்திரன் அவர்கள், கத்தோலிக்க குரு பேணாட் கொஸ்தா, மெதடிஸ்த குரு ஈ.பி.பெர்னாண்டோ, தேசிய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ராஜேஸ் பெர்னாண்டோ மற்றும் நாஸ்டன் வீமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருடன் சமாதான செயலக இணைப்பாளர் மனோஜும் உடனிருந்தார்.

# போர்நிறுத்தத்தைக் கைவிடும் யோசனை எதுவுமில்லையாம்!

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு —

விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாட்டைக் கைவிடவேண்டுமென்று தான் கூறியதாக வெளியான செய்திகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

பிரதமர் அலுவலகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் -

போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான நிலையில் மாற்றம் எதுவுமில்லை. ஆனால், அதில் சில விடயங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எதிர்வரும் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவுள்ளதாகவும், விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக மீளமைத்தல் உட்பட 12 நிபந்தனைகளுக்கு பிரதமர் இணங்கியதாகவும் ஜே.வி.பி. அறிவித்திருந்தது.


இந்நிலையில் - தாங்கள் அப்படியான ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லையென்றும் -

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எவருடனும் பேச்சுக்களை நடத்தத் தயாராகவிருப்பதாகவும், மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய அணியின் இறுதிப் போட்டி தோல்வி; விசாரணை நடத்த நால்வரடங்கிய குழு!

புதுடெல்கி—

இலங்கை மற்றும் சிம்பாப்வே நாடுகளில் நடந்த முத்தரப்பு இறுதிப் போட்டிகளிலுமே இந்திய அணி தோல்வியைச் சந்தித்தது. இதனால்,



ரவி சாஸ்திரி

இந்திய அணி மீது கடும் விமர்சனம் எழுந்துள்ளது.


இது குறித்து இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா கூறியதாவது -

அண்மைக் காலமாக இந்திய அணியின் திறமை வெளிப்பாடு மோசமாக இருக்கிறது. எனவே இது குறித்து முழு ஆய்வு நடத்தப்படும்.

முன்னாள் வீரர்கள் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, வெட்கட் ராகவன், பயிற்சியாளர் கிரேக் சப்பல் ஆகியோரைக் கொண்ட குழு இந்த ஆய்வை நடத்துகிறது. எதிர்வரும் 25ஆம் திகதியில் இருந்து 5 நாட்கள் இந்த ஆய்வு நடத்தப்படும்.

அப்போது கப்டனின் திறமை, மற்ற வீரர்களின் திறமை ஒவ்வொன்றும் அலசி ஆராயப்படும். இதன் மூலம் அவர்கள் தொடர்ந்து விளையாடத்தகுதியாக உள்ளனரா என்று கண்டு பிடிக்கப்படும்.

அதன்பின்னர் வீரர்கள், தெரிவுக் குழுவினர் அடுத்துவரும் போட்டிகளில் இந்த ஆய்வு அறிக்கையை மையமாக வைத்து வீரர்களைத் தெரிவு செய்வார்கள். தெரிவுக் குழு தன்னிச்சையாக செயற்படும் அமைப்பாகும். இருந்தாலும், அண்மைக் கால போட்டிகளை ஆராய்ந்து



ரன்பீர் சிங் மகேந்திரா

அவர்கள் தெரிவு செய்வார்களென எதிர்பார்க்கிறேன்.

நாங்கள் வீரர்களிடம் இன்னும் அதிக திறமையை எதிர்பார்க்கிறோம். இது சம்பந்தமாக நான் அவர்களிடமே பேசியுள்ளேன். நான் அவர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளேன். மக்களும் அப்படித்தான் உள்ளனர். இதை வீரர்கள் உணரவேண்டும்.


அவர்களின் விளையாட்டைப் பார்த்து நாடு அதிருப்தி அடையும் நிலையை ஏற்படுத்தக்கூடாது. நாட்டு மக்களின் உணர்வு எங்களுக்குத் தெரிகிறது. எனவே தான் ஒவ்வொரு வீரர்களின் திறமையும் மறு ஆய்வு செய்யப்படுகிறது. அத்துடன் வீரர்களின் ஒழுங்கீனம் குறித்தும் அறிக்கை பெறப்படும்.

எந்த வீரர்களுக்கும் கருணை காட்டமாட்டோம். திறமை இருந்தால் தொடர்ந்து நீடிக்கலாம். கப்டன் கங்கூலியின் திறமை குறித்து நான் எதுவும் சொல்லமுடியாது. 2007 உலகக் கிண்ண போட்டிக்கு முழு தகுதி பெறும் வகையில் இந்திய அணி உருவாக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய அணியின் முன்னாள் கப்டன் வெங்சர்கார் கூறியதாவது -

இந்திய அணியில் திறமையற்ற சில வீரர்கள் உள்ளனர். குறிப்பாக பந்துவீச்சாளர்களின் திறமை மோசமாக உள்ளது.

நியூஸிலாந்துடனான இறுதிப் போட்டியில் கப்டன் கங்கூலி திறமையாக அணியை வழிநடத்தவில்லை. களத்தடுப்பை முறையாகக் கையாளவில்லை. எனவேதான் நியூஸிலாந்து வீரர்கள் அதிக ஓட்டங்களை எடுத்தனர். தனிப்பட்ட முறையிலும் அவரின் விளையாட்டு மோசமாகவே உள்ளது. இது அவருடைய கப்டன் பத



கிரேக் சப்பல்


விக்கு நல்லதல்ல. எனவே கப்டன் பதவி குறித்து தெரிவுக்குழு மறுபரிசீலனை செய்யலாமெனத் தெரிவித்தார்.

# விளையாட்டு

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

## டேவன் போர்ட், மௌரிஸ்மோ காலிறுதியுடன் வெளியேற்றம்!





நியூயோர்க்—

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி பெண்கள் பிரிவில் காலிறுதிப் போட்டியில் டெமன்டிவா, மேரி பியர்ஸ் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி



பெண்கள் பிரிவில் அரையிறுதிக்கு தெரிவு செய்வதற்கான காலிறுதிப் போட்டி நடந்தது. இந்தப் போட்டி ஒன்றில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனை டேவன் போர்ட் (அமெரிக்கா) ரஷ்ய வீராங்கனை எலீனா டெமன்ரீவா ஆகியோர் மோதினார்கள். இதில் டெமன்ரீவா 6-1, 3-6, 7-6 என்ற செட்களில் டேவன் போர்ட்டைத் தோற்கடித்தார். இதன் மூலம் டெமன்ரீவா அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

அதேபோல நடந்த இன்னொரு போட்டியில் உலகின் 3ஆம் நிலை வீராங்கனை மௌரிஸ்மோ (பிரான்ஸ்) அதே நாட்டு வீராங்கனை மேரி பியர்ஸை எதிர்த்து ஆடினார். இதில் மேரி பியர்ஸ்-மௌரிஸ்மோவை 6-4, 6-1 என்ற நேர் செட்டில் வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

அரையிறுதிப் போட்டியில் ஷரபோவா (ரஷ்யா) கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்) ஆகியோர் மோதுகின்றனர். இன்னொரு போட்டியில் மேரி பியர்ஸும், டெமன்ரீனாவும் சந்திக்கின்றனர்.

ஆண்கள் பிரிவில் காலிறுதிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் முதல் போட்டியில் ஆஜென்ரீன வீரர் கில்லர்மோ கொரியா, அமெரிக்க வீரர் ராப்பி சினப்ரி ஆகியோர் மோதினார்கள். இதில் சினப்ரி 4-6, 6-1, 7-5, 6-3, 7-5 என்ற செட்களில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## உலக கிண்ண உதைபந்தாட்டத்திற்கு துருக்கி தகுதிபெற 3 புள்ளிகள் தேவை

கெய்வ்—

அடுத்த ஆண்டு நடைபெறும் உலக கிண்ண உதைபந்தாட்டத்தில் பங்கேற்கும் அணிகளை தெரிந்தெடுக்கும் தகுதிச் சுற்று போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன.

ஒரு பிரிவு போட்டி உக்ரைன் நாட்டில் உள்ள கெய்வ் நகரில் நடந்துவருகிறது.

இதில் உக்ரைனும், துருக்கியும் மோதின. துருக்கி 1:0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை வீழ்த்தி வெற்றிபெற்றது. துருக்கிக்கு இன்னும் 3 புள்ளிகள் கிடைத்தால், உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதிபெற்றுவிடும்.

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

## பொமேர்ஸ், நவசக்தி அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன!

பருத்தித்துறை—

ஜனசக்தி சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பொமேர்ஸ், நவசக்தி அணிகள் காலிறுதி ஆட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்டன.

முதலாவது ஆட்டத்தில் பொமேர்ஸ் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணி மோதியது. ஆட்டம் தொடங்கி 12ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணிக்கு கிடைத்த கோணர் வாய்ப்பை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கோலாக்கினர். இதில் கோணர் உதையை விமல் அடிக்க, அதேயணியைச் சேர்ந்த நிரோஜன் தலையால் இடித்துக் கோலாக்கினார்.

அதைத் தொடர்ந்து 20ஆவது நிமிடத்தில் கோல் பிரசேத்துக்குள் அண்ணா சிலையடி வீரரின் கையில் பந்துபட்டமையால், பொமேர்ஸ் அணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. இதனை அதேயணியைச் சேர்ந்த விமல் அடித்து மேலுமொரு கோலைப் போட்டார். தொடர்ந்து 22ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை பொமேர்ஸ் அணியினர் கோலாக்கத் தவறியபோதும், 25ஆவது நிமிடத்தில் வைகுந்தன் கொடுத்த பந்தை அருந்தவராசா கோலாக்கி தனது அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றார். இதனால், இடைவேளைக்கு முன்னர் பொமேர்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது, அண்ணா சிலையடி அணி வீரர் திலீபன் இரு கோல்களைப் போட்டு பொமேர்ஸ் அணியை திணறடித்தார். இதில் அண்ணா சிலையடி அணி 10ஆவது நிமிடத்தில் ஜெயகாந்தன் தட்டிக் கொடுத்த பந்தை நேர்த்தியாகவும், 13ஆவது நிமிடத்தில் ரவிசுதன் கொடுத்த பந்தைத் தலையாலும் இடித்து திலீபன் கோலாக்கினார்.

அதன்பின்னர் 16ஆவது நிமிடத்தில் கிடைத்த உள்ளெறிகையை அண்ணா சிலையடி வீரர் ஜெயதீபன் எறிய அப்பந்து தலையால் இடிக்கப்பட்டு கோல் கம்பத்துக்கு மேலால் சென்றது.

தொடர்ந்து 19ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணிக்கு கோணர் உதை கிடைத்தது. இதனை விமல் அடிக்க அதேயணியைச் சேர்ந்த அருந்தவராசா தலையால் இடித்துக் கோலாக்கினார். அதைத் தொடர்ந்தும் பொமேர்ஸ் அணியினர் 22ஆவது நிமிடத்தில் பாக்கியதாசன் தட்டிக் கொடுக்க, அப்பந்தை வைகுந்தன் கோலாக்கினார். இதனால் பொமேர்ஸ் அணி, அண்ணா சிலையடி அணியை 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

அடுத்த ஆட்டமாக நவசக்தி அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதியது. இரு அணிகளும் ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே மிகவும் மோசமாக ஆடின. இதனால் தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை இரு அணிகளும் கோலாக் கத் தவறிவிட்டன. இந்த நிலையில் இரு அணிகளும் இடைவேளைக்கு முன்னர் கோல் எதனையும் போடவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது, நவசக்தி அணியினர் தமது வியூகத்தை மாற்றி ஆட ஆரம்பித்தனர். இதனால், 7ஆவது நிமிடத்தில் அவ்வணியைச் சேர்ந்த பிரகாஷ் மிகச் சிறப்பான கோல் ஒன்றைப் போட்டார். அதைத் தொடர்ந்து 14ஆவது நிமிடத்தில் ரஜனிகாந் மேலும் ஒரு கோலைப் போட்டார். அதன்பின்னர் நக்கீரன் அணியினரின் வேகம் குறைந்தது. இதனைப் பயன்படுத்தி நவசக்தி அணியினர் 25, 29ஆவது நிமிடங்களில் மேலும் இரு கோல்களைப் போட்டனர். இதில் முதல் கோலை ராஜ்ரூபனும், அடுத்த கோலை அமல்ராஜும் அடித்தனர். இதனால் நவசக்தி அணி நக்கீரன் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (12)



## இந்திய சூதாட்டக்காரர்களுடன் முரளிதரனுக்குத் தொடர்பாம்!

## இந்திய பொலிஸார் சந்தேகம்

மும்பை—

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கடந்த மாதம் நடைபெற்ற முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் போது- ஆட்டநிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டதாக மும்பை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மும்பை நடன பார்களில் நடனம் ஆடி வந்த அழகி தாருன்னும்கான். இவர் கோடி கோடியாய் சம்பாதித்து இருந்ததை இந்தி வருமான வரி அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

அவர் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததும், பிரபல சூதாட்டக்காரர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததும் இப்போது அம்பலமாகி இருக்கிறது.

இலங்கையில் கடந்த 9 ஆம் திகதி முத்தரப்பு கிரிக்கெட் இறுதிப் போட்டி நடந்தது. இந்தியாவும் இலங்கையும் இறுதிப் போட்டியில் மோதின. அன்று தாருன்னும்கான், மும்பையில் உள்ள கிரிக்கெட் சூதாட்டக்காரர்களுடன் செல்போன் எஸ்.எம்.எஸ். மூலம் ரகசிய மொழியில் பேசியுள்ளார். வருமான வரித்துறையினர் கைப்பற்றியுள்ள செல்போனில் இவை பதிவாகியுள்ளன.

அதில் தாருன்னும்கான் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்ட விபரங்கள் உள்ளது. தாருன்னும்கானின் ஆட்ட நிர்ணயபடி அன்றைய போட்டியில் இலங்கை தோற்கவேண்டும். ஆனால், அதற்கு மாறாக அந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது. இதனால் தாருன்னும்கான் அன்று சுமார் இரண்டரைக் கோடி ரூபாவை இழந்துள்ளார். தாருன்னும்கான் இலங்கையில் யாருடன் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்ற விபரமும் இப்போது தெரியவந்துள்ளது.

இலங்கை அணி முன்பு இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது, இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் தாருன்னும்கானைச் சந்தித்துள்ளார். அப்போதே சூதாட்டக்காரர்கள் தாருன்னும்கான் மூலம் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டுள்ளனர். அது போலவே இந்த ஆட்ட நிர்ணயத் தையும் முரளிதரன் மூலம் செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

முரளிதரன் மற்றும் பல கிரிக்கெட் வீரர்கள், பொலிவூட் நடிகர்கள் ஆகியோருக்கு தாருன்னும்கானுடன் தொடர்பு இருந்தது உண்மை என்று மும்பை பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

2 வருடங்களுக்கு முன்பு தாருன்னும்கான் நடனம் ஆடிய பாரில் பொலிஸார் திடீர் சோதனை நடத்தினார்கள். அப்போது இலங்கையைச் சேர்ந்த 2 கிரிக்கெட் வீரர்கள் சமையலறை வழியாகத் தப்பியோடிவிட்டதாக இந்த பார் வாடிக்கையாளரான சச்சின்ஷா என்பவர் கூறியிருக்கிறார்.

அவர்கள் நடனம் பார்க்க வந்திருக்கமாட்டார்கள். ஆட்ட நிர்ணயம் செய்வதற்கே வந்திருக்கவேண்டுமென்றும் அவர் கூறுகிறார். வருமான வரித்துறை கைப்பற்றிய செல்போனை இப்போது மும்பை பொலிஸார் கேட்டுள்ளனர். அதன் மூலம் பல விவகாரங்கள் வெளியேவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சங்கானை தபாலகத்திற்கென நிரந்தரமான காணி இருக்குமானால் சிறந்த சேவையை வழங்கமுடியும்!

## வடமாகாண அஞ்சல்மா அதிபர் ஜெயரத்தினம்

சங்கானை—

அளவெட்டி, சுன்னாகம், அச்சுவேலி தபாலகங்களை நிரந்தரமான கட்டடங்களில் அமைப்பதற்கு ஏற்ற காணிகளை அவ்வப்பகுதி மக்கள் தந்துதவியமையால், அங்கு நிரந்தரமாக தபாலகங்களை அமைப்பதற்கான வசதிகளை எமது திணைக்களம் மேற்கொண்டுள்ளது. அது போல சங்கானையிலும் ஒரு காணியை தந்துதவுவீர்களானால் நிரந்தரமான ஓர் தபாலகத்தை கட்டுவதற்கேற்ற நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என வடமாகாண அஞ்சல் மா அதிபர் நா.ஜெயரத்தினம் தெரிவித்தார்.

வடமாகாண அஞ்சல் அதிபராகக் கடமையாற்றி 12.09.2005 இல் ஓய்வுபெறும் நாகமணி ஜெயரத்தினம், சங்கானை தபாலக உத்தியோகத்தர்களால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில்- இந்தத் தபாலகத்துக்கென ஓர் காணி இருக்குமாயின், அந்தக் காணியில் நிரந்தரமான ஓர் தபாலகத்தை அமைப்பதற்குரிய நிதியை எமது திணைக்களம் மூலம் ஒதுக்க முடியும். இவ்வாறு பெறப்படுகின்ற காணி பிரதான வீதியில் அமைந்திருந்தால், போக்குவரத்து வசதிகள் மூலம் தபால் சேவையை சுலபமாக நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். மக்களின் தொடர்பாடல் சாதனங்களில் தபால் சேவை அதி முக்கிய இடத்தைப் பெறுகிறது. இந்த ஊர் மக்கள் முயன்றால் ஓர் காணியை இந்த அலுவலகத்துக்குச் சுலபமாகப் பெற்றுத் தர முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வலி. மேற்கு பிரதேச செயலாளர் சீ.ஏ. மோகன்ராஜ் தனதுரையில், பிரதேச செயலகத்துக்கும் தபால் அலுவலகங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டு. பொது மக்களுடனான தொடர்புகளுக்கு தபாலகங்களே எமக்கு கைகொடுத்துதவுகின்றன. போர்க்காலச் சூழலிலும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் அரிய சேவையை யாழ்.மாவட்ட தபாலகங்கள் பொது மக்களுக்கு அளித்து வந்தன.

அனுபவமும் ஆற்றலும் மிக்க சேவையாளர்கள் அரச நிர்வாகங்களில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்வது, பல நிர்வாக நெருக்கடிகளை ஏற்படுத்தும். முன்னைய காலங்களைப் போல தற்போதைய அரச ஊழியர்கள் தமது கடமைகளைச் செய்வதில்லை என்ற அபிப்பிராயம் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு நிர்வாகத் திறமை, தீர்மானித்து முடிவு எடுக்கும் தன்மை, பொருத்தமான நேரத்தில், பொருத்தமான சேவையை, சரியான முறையில் எடுத்து செயற்படுத்தும் தன்மைதான் இன்றியமையாதது ஆகும். இந்தத் திறமைகளை ஓய்வுபெறப் போகும் அஞ்சல் அதிபதி பெற்றிருந்த காரணத்தால், பல பதவி உயர்வுகளைப் பெற்று இந்நிலைக்கு அவர் உயரக்கூடிய சந்தர்ப்பத்தை அது அவருக்கு வழங்கியது எனக் குறிப்பிட்டார்.

சங்கானை தபால் அதிபர் யோகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவித் தபால் அதிபர் இன்பராஜ் அஞ்சல் அதிபதிக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்து பாராட்டு பத்திரமும் வழங்கினார். (48)

### தவறுக்கு வருந்துகிறோம்...

நேற்றய எமது பதிப்பில் 5 ஆம் பக்கத்தில் வெளியாகிய செய்திப் படத்தில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளரின் படத்துக்குப் பதிலாக வேறொருவரின் படம் தவறுதலாக மாறிப் பிரசுரமாகிவிட்டது. இந்தக் தவறுக்கு வருந்துகிறோம்.

## மஹா கும்பாபிஷேகம்

மானிப்பாய்—

சங்குவேலி தெற்கு மானிப்பாய் திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

இன்று காலையில் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் மகேஸ்வரபூஜை நடைபெற்று அன்னதானமும் நடைபெறுமென ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (100)

## பிரதேச சபைகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள்

சுதுமலை—

வலிகாமம் மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேச சபைகளுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகளை செய்து வருவதாகத் தெரிகிறது.

கிரிக்கெட், கயிறிழுத்தல் போட்டிகளுடன் வேறு சில போட்டி நிகழ்வுகளையும் நடத்தவுள்ளதாகவும், போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள நகர சபை, பிரதேசசபை உள்ளூ ராட்சித்திணைக்கள அணிகள் தம் விபரங்களை விரைவாக அனுப்புமாறும் பிரதேசசபையினர் கேட்டுள்ளனர்.

பெண்களுக்கான 7 பேர் கொண்ட கயிறிழுத்தல் போட்டியும், ஆண்களுக்கான 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட் டியும் நடைபெறவுள்ளது. (91)

## புத்தகக் கண்காட்சி

உடுவில் —

வலி.தெற்கு பிரதேச சபை நடத்தும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் 13,14,15ஆம் திகதிகளில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்ச்சிகளின் ஓரங்கமாக இந்தப்புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது. காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வாசகர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைப் பார்வையிடவும், கொள்வனவு செய்யவும் முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது (101)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மக்களிடையே பொதுஅறிவுப்போட்டி!

உடுவில்—

வலி.தெற்கு சுன்னாகம் பிரதேச சபை இந்த வருடம் செப்ரெம்பர் 12 முதல் 18ஆம் திகதி வரை கொண்டாடவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டி அதன் எல்லைக்குட்பட்ட பொதுமக்களுக்கு பொது அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

வினாப்பத்திரமாக வெளியிடப்பட்டுள்ள இந்த திறந்த பொது அறிவுப் போட்டியில் பிரதேச சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய பொதுமக்கள் கலந்து கொள்ள முடியும்.

வலிதெற்கு பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பொது நூலகங்களிலும் வினாத்தாள்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி விடையளித்து அவற்றை இந்த மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்னதாக நீளக் கடித உறையிலிட்டு 'பொது அறிவுப் போட்டி' செயலாளர், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் மூவருக்குப் பெறுமதி மிக்க பரிசில்களும் மேலும் 10 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுமென பிரதேச சபையால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஒன்று

பெயர் : த.கஜீபன்
முகவரி : அச்சுவேலி
வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

## உபஅலுவலகத்துக்கு புதிய பொறுப்பதிகாரி!

மானிப்பாய் —

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்துக்கு புதிய பொறுப்பதிகாரியாக எஸ். குலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ்.ஸ்ரெனிஸ்லாஸ் ஓய்வுபெற்றுச் செல்வதையடுத்தே கடந்தவார இறுதியில் சபையின் செயலாளர் எம்.கே. சாந்தசீலனால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (100)

## 20 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள்!

யாழ்ப்பாணம் —

யுனிசெப் நிதி உதவித் திட்டத்தின் கீழ் யாழ் . நகர் கிழக்கு ஜே/74 பிரிவில் உள்ள 20 பயனாளிகளுக்கு மலசல கூடங்கள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த மலசல கூடங்கள் பயனாளிகளின் குடும்பப் பங்களிப்புடன் கட்டி முடிக்கப்படவுள்ளதாகவும், இதற்கான வேலைத் திட்டங்கள் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## வலிதெற்கு பிரதேச சபையில் இலவச சித்தவைத்திய முகாம்!

உடுவில் —

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேச சபை இலவச சித்த மருத்துவ முகாமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 16,17ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இந்த மருத்துவ முகாம் நடைபெறும்.

உடுவில் பிரதேச செயலக வீதியில் அமைந்துள்ள இந்து இளைஞர் மன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ள இந்த முகாமில் நோய்களைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, மற்றும் சிறுநீர்ப் பரிசோதனையும் இவற்றுக்குப் பரிகாரமாக சித்தமருத்துவ சிகிச்சையும் இடம்பெறவிருப்பதால் பொது மக்கள் தமது உடல் பரிசோதனைகளைச் செய்து தகுந்த பரிகாரங்களைப் பெறுமாறு வலி. தெற்கு பிரதேச சபை அறிவித்துள்ளது. (101)

## அனலைதீவு மின்சார நிலையத்தின் கூரைச்சீற்றுக்களை மாற்றக்கோரிக்கை

ஊர்காவற்றுறை —

அனலைதீவு மின்நிலையத்தின் கூரைசீற்றுக்களைத் திருத்தித்தருமாறு அந்தப் பகுதி மின் அத்தியட்சகரினால் ஊர் காவற்துறை உதவி அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

அனலைதீவு, மின்நிலையத்தின் கூரைச்சீற்றுகளுக்கு விசமிகள் கற்களை வீசியதால் கூரைச் சீற்றுக்கள் உடைந்தநிலையில் காணப்படுகின்றது. இதனால் மழை காலத்தில் இந்தச் சீற் ஓட்டைகள் வழியாக மழைநீர் உட்புகுந்து மின்பிறப்பாக்கிகள் பழுதடையும் நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

எனவே மழைகாலத்துக்கு முன்னர் மின்நிலையத்தின் கூரைப் பகுதியைப் புனரமைத்துத் தர வேண்டும் என்றும்,

இந்த மின்நிலையம் தொடர்பான மின் அத்தியட்சகரின் கோரிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்ட உதவி அரசாங்க அதிபர் இந்த மின் நிலையத்துக்கு உடைந்த சீற்களுக்குப் பதிலாக புதிய சீற்களை அந்தப்பகுதி மக்களைக்கொண்டு கொள்வனவு செய்து மாற்றுமாறு அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு பணிப்புரை வடுத்துள்ளார். (44)

## நெட்டிலிப்பாய் ஆலயத்தில் இலட்சார்ச்சனை

உடுவில்—

கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய இலட்சார்ச்சனை தினமும் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய இலட்சார்ச்சனை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறுவதுடன் பூர்த்தியாகும். (101)

## குடத்தனை தென்னிந்திய திருச்சபையில் பாரதி விழா


வடமராட்சி —

குடத்தனை தென்னிந்திய திருச்சபையால் நடத்தப்படுகின்ற மாலைநேர கல்வி வளாகத்தினர் எதிர்வரும் 24 ஆம் திகதி வருடாந்த பாரதி விழாவை நடத்தவுள்ளனர்.

கல்வி வளாக முத்தமிழ் மன்றத் தலைவி யோ.கனிமொழி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் சந்திரன் பிரான்சிஸ் கலந்துகொள்ளவுள் ளார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு இடம் பெறுவதுடன் மாணவர்களின் கவிதை, நடன, நாடக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (91)





வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் பொறுப்பதிகாரி எஸ்.ஸ்ரனிஸ்லாசுக்கு நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பிரதேசசபையின் செயலாளர் எம். ஜே.சாந்தசீலன் வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிப்பதையும்

செயலாளர், புதிய பொறுப்பதிகாரி ஆகியோருடன் அலுவலக உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம் காணலாம். (100)




# பெண் ஏன் அடக்கப்பட்டாள் ஏன் ஒடுக்கப்பட்டாள்...?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உண்மையில் ஒரு ஆணை விட, ஒரு பெண்ணால்தான் ஒரு வியாபாரஸ்தலத்தையோ, அல்லது ஒரு பெரிய நிறுவனத்தையோ கூட்டாகக் கொண்டு நடத்தி, கூடுதலாக வெற்றி பெறவைக்க முடியும். ஒரு சொல்லை ஒரு ஆணிடம் சொன்னால் - அவனால் அந்தச் சொல்லுக்கு ஒரு அர்த்தம்தான் கண்டுபிடிக்க முடியும் என்றால் அதையே ஒரு பெண்ணிடம் சொன்னால் அவள் அது பற்றி நன்கு யோசித்து பலகோணத்தில் பல அர்த்தங்கள் கண்டுபிடிப்பாள். ஒரு விடயத்தைச் சொன்னால் அதைக் கிரகித்து, அதற்குப் பதில் சொல்லும் தன்மை ஆண்களின் மூளையில் ஒரு பங்கு என்றால், அதைக் கிரகித்து பதில் சொல்லும் தன்மை பெண்களின் மூளையில் ஆறு பங்கு. இவைகள் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகள்.



ஒரு ஆணின் மூளை ஒரு பெண்ணின் மூளையைவிட 130 கிராம் நிறை அதிகமானது. ஆனால் இரு மூளைகளினதும் செயற்பாடுகள் - ஆதிகாலத்திலிருந்து இன்றைக்கு வரைக்குமான சூழ்நிலைகளுக்கும், வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசைவாக்கம் பெற்று, வேறுவழிகளில் செயற்படுகின்றன. இங்கு ஆண் உசத்தி என்றோ பெண் உசத்தி என்றோ எதுவும் இல்லை.

அன்றையகாலத்தில் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து மெதுமெதுவாக சுகங்களை அனுபவிக்கத் தொடங்கிய ஆண்கள் - ஒரு காலகட்டத்தில் பெண்களை வெறும் சுகபோகப் பொருட்களாகவே பாவிக்கத் தொடங்கிவிட்டார்கள். சுயநலம் கருதி, உளவியல் ரீதியான தாக்கத்தைக் கொடுத்து, பெண்களை அடிமைப்படுத்தியும் விட்டார்கள். இதனால் வீட்டுக்குள்ளேயே இருந்து இசைவாக்கம் பெற்ற மூளையிடமிருந்து விடுதலை பெறமுடியாத பெண்கள் - தாம் வீட்டுக்குள் முடங்கவேண்டியவர்கள் என்று நினைத்துவிட்டார்கள். அடங்கி அடங்கியே வாழ்ந்ததால் தாம் அடங்க வேண்டியவர்கள் தான் என நினைத்து, தமக்குத் தாமே விலங்கிட்டு அடங்கியும் விட்டார்கள்.

இதேநேரம் இவையெல்லாம் பிழை. முன்னர் நாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியதற்குக் காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும், எம்மால் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை. சிந்திக்கத் தொடங்கிய இந்தப் பெண்களின் விழிப்புநிலையே இன்று சில ஆண்களுக்குப் பிரச்சினையாக இருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகிறது.

இந்த உண்மைக் காரணங்களை ஆண், பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண் அடக்குமுறை, பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல்கள் என்பது நன்கு புலப்படும்.

இப்போதுகூட உங்கள் மனதில் எங்கே பெண்கள் அடிமையாக இருக்கிறார்கள் என்ற கேள்வி எழலாம். அவர்கள் சுதந்திரமாகத்தானே திரிகிறார்கள் என்ற சிந்தனை ஓடலாம். ஆயுதம் தூக்கிப் போரிடுகிறார்கள் என்ற பிரமிப்பு ஏற்படலாம். இத்தனை சலுகைகள் கொடுத்துவிட்டோம்...! இன்னுமா திருப்தியில்லை என்ற எரிச்சல் எழலாம்.

உண்மையில் பெண்ணுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. வெறும் சலுகை மட்டும் வாழ்க்கையில்லை. அவள் சுயம் பேணப்பட வேண்டும். அவள் சுயமாக இயங்கச் சுதந்திரம் கிடைக்கவேண்டும். பெண் இப்படித்தான் வாழவேண்டும் என்று சமூகத்தின் அடிமனதில் எழுதிவைக்கப்பட்ட சில எழுதாத சட்டங்கள் அழித்தொழிக்கப்படவேண்டும். அவள் அவளாக வாழ அவள் மனதில் தைரியம் வரவேண்டும். இதுபற்றியதான சிந்தனை சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரிடமும் எழவேண்டும்.

கருப்பையில் மூன்றுமாதக் கருவாக இருக்கும்போதே ஒரு குழந்தை தாயின் உணர்வுகள், தாயைச் சுற்றி ஒலிக்கும் குரல்கள்... என்று எல்லாவற்றையும் கிரகிக்கத் தொடங்கிவிடும். வெளியில் கேட்கும் சினிமாப் பாடலைக்கூட மனப்பாடம் செய்யத் தொடங்கிவிடும். இது இன்றைய ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு.

இதன் விளைவுகளை பெற்றோர்கள் சரியான முறையில் சிந்தித்து ஒரு பெண் தாயாகத் தொடங்கியதிலிருந்தே ஒவ்வொரு செயற்பாட்டின்போதும் இதைக் கருவுக்குள் உருவெடுத்திருக்கும். எமது பிள்ளையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது என்ற எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். பிறந்த பின்னும், குழந்தைகள் வளர்ந்துகொண்டிருக்கும் போதே ஒவ்வொரு விடயத்திலும்; ஆண் குழந்தை, பெண் குழந்தை என்ற பேதமின்றி, பாரபட்சமின்றி அவர்களை வளர்க்கவேண்டும். அவர்கள்முன் பேசுவதுகூட நான் ஆண் என்றோ, அல்லது நான் பெண் என்றோ எந்தவிதமான தாழ்வு மனப்பான்மையையும் அவர்கள் மனதில் விதைக்கப்படாத விதமாக இருக்கவேண்டும்.

இப்படியான அவதானம் மிகுந்த செயற்பாடுகள் மனித் மூளையில் ஆழப் பதிந்திருக்கும் பெண் அடங்கவேண்டியவள்தான் என்ற உள்ளுணர்வை அழித் தொழிக்க ஏதுவாக அமையும்.

காலப்போக்கில் ஆண்களின் மூளையும் இந்த நடைமுறையுடன் இசைவாக்கம் பெற்றுவிடும். அப்போதெல்லாம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளில் ஆண், பெண் மூளை பற்றியதான முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருக்கும். - சந்திரவதனா -

# சிறுவர் நடத்தைகளை சமாளிப்பது எப்படி?

சிறுவர்கள், சிறுமியர்களில் சிலர் அடம்பிடிப்பவர்களாகவும், அடங்காப் பிடாரிகளாகவும், இல்லையேல் பயந்தாங்கொள்ளிகளாகவும் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இது சிறுவர்களின் இயல்பான நடத்தைக்குப் புறம்பானது. இதனால் சில பெற்றோர்கள் இந்தப் பிள்ளைகளை எப்படிக் கரையேற்றுவது என அங்கலாய்த்து, தலையைப் பிய்த்துக் கொள்வார்கள்.

இது குழந்தைகளின் நடத்தை தொடர்பான பிரச்சினை. இதைப் பெற்றோரும், ஆசிரியர்களும் சரியாக அடையாளம் கண்டுகொண்டால் முற்றிலும் தீர்க்கக் கூடிய ஒன்றே என்கிறார்கள் உளவியலாளர்கள்.

பெற்றோர்கள் எமது பிள்ளைக்கா இப்படி ஒரு குணம் என்று தலையில் கைவைக்கத் தேவையே இல்லை. வழமையான குணங்களில் மாற்றம் காணப்படுமானால், அதைக் கவனித்து, சரியாகக் கையாளாமல் விடும்போதே, குழந்தைகள் முரட்டுக் குழந்தைகளாகிவிடுகின்றனர்.

பெற்றோர்கள் கவனிப்பின்மை, தாய், தந்தை இருவருமே வேலைக்குப் போகும் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் எப்படியாவது படித்து நல்ல புள்ளிகளைப் பெறவேண்டும், முதுகுத்தோலை உரித்துவிடுவார்களோ என்ற மன அழுத்தத்தால் பாதிக்கப்படும் குழந்தைகள் பெரும்பாலும் நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகின்றன.

சாப்பிடும் முறையில் ஏற்படும் மாற்றங்கள், உறங்கும்முறை, முற்கோபம், பிடிவாதம், அனுங்கு முறைகளில் காணப்படும் மாற்றங்கள், பாடசாலைகளில் படிப்பில் காட்டும் அக்கறையில் வீழ்ச்சி, வகுப்பில் திறமைசாலிகள் வட்டத்துக்குள் வராதிருத்தல், நண்பர்களுடன் பழகுவதில் ஏற்படும் பின்னடைவு, பொய் சொல்லித் தப்பிக்கப் பார்த்தல்



என்பன இந்த நடத்தைக் கோளாறுக்கான சமிக்ஞைகளாகும்.

இவை எல்லாம் உளவியல் பிரச்சினை என மருத்துவரிடம் சொல்லவேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லுகின்றார்கள் உளவியலாளர்கள். இவ்வாறான நடத்தைக் கோளாறுகள் ஏற்படுவதற்கு முன்னரேயே முன் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும் என்கின்றார்கள்.

பொதுவாகப் 12 வயதில் அல்லது அதன் பின்னர் இந்தப் பிரச்சினை ஆரம்பமாகிறது. அல்லது வெளிப்படையாகத் தெரியவரும் என்று சொல்லும் இவர்கள் தமது பிள்ளைகளுடன் எப்படி நடக்கவேண்டும் என்பதைப் பெற்றோர் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். அவர்களுக்குச் சண்டை சச்சரவுகளில் ஈடுபடக் கூடாது என்று அறிவுரை வழங்கவேண்டும்.

சிறு பராயத்திலேயே அவர்களுக்கு நீதிக்கதை களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். திடீரெனக் கோபம் கொள்வது, அடிதடியில் இறங்குவது மிகவும் தவறானது என்பதை எடுத்துச்சொல்ல வேண்டும். நீதிக்கதைகள் எப்போதும் சிறுவர்களின் விரியும் அறிவுக்கு உபயோகமாகவும், பாதைவகுப்பதாகவும் அமையும். நீதிக்கதைகளைக் கூறுங்கள், நல்ல சிறுவர் நூல்களைப் படிக்கக் கொடுங்கள். நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும் என்று அடிக்கடி கூறுங்கள். இவை இளைஞர், யுவதியாகும்போதும் நல்ல வழியில் நிலை நிறுத்த உதவுகின்றன.

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

ஆளுமை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்பவர்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றனர். பெண்ணின் ஆற்றலும், அறிவும் ஆளுமையும் ஆண்களை மிஞ்சி விடக்கூடாதென்பதில் சிலர் அக்கறையாயிருப்பதுண்டு. சம அளவான சந்தர்ப்பங்களை பெண்களுக்கும் வழங்கி அறிவு, ஆற்றல், ஆளுமைவிருத்தியைக் கணிப்பீடு செய்வதில் ஆர்வம் காட்டுதல் நல்லதல்லவா? காலங்காலமாய் பரிச்சயப்பட்ட 'பெண் பலவீனமானவள்' என்ற கோட்பாட்டை வைத்து இன்றும் பெண்களின் ஆளுமை விருத்தியை அளவீடு செய்பவர்கள் இருக்கிறார்கள்.

வேலைத் தளத்தில் ஒரு பெண் ஒரு முறை திகதியை மாற்றி எழுதிவிட்டாள்.

'ஏன் திகதியை மாற்றி எழுதினீர்கள்?' என்ற மேலதிகாரி உடனே -

'ஓ... சாறி சட்டை நகைக் கதை என்றால் உங்களுக்கு மனதில் நிக்கும்' என்றாராம். 'உங்களுக்கு' என்பதை அழுத்தமாக.

'மறதி என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது தானே' என்றாள் அவள்.

இது அவர்களின் குற்றமல்ல. படிமுறை படிமுறையாக பெண்கள் பற்றிய கருத்துருவாக்கங்கள். இப்படித்தான் இருந்து வந்துள்ளதை எம்மிடம் மட்டுமல்ல உலகின் பல இடங்களிலும் இவ்வாறான தன்மைகள் காணப்படுகின்றன.

பெண்களின் அறியாமை என்பது உலகம் பூராகவும் கணிசமான அளவுக்கு காணப்படுகிறது. எப்படியென்றால் ஒரு மன்னரின் பதின்மூன்றாவது மனைவியாக தெரிவாகுவதற்கு ஐம்பதாயிரம் இளம் பெண்கள் காத்திருக்கிறார்களாமே! வியப்பாகவும் வேதனையாகவும் இருக்கிறது. குறிப்பிட்டளவு பெண்கள், உலகம் பூராகவும் அப்பாவிகளாக இருக்கிறார்கள். இந்த அப்பாவிகளை ஆணாதிக்க மனோபாவ சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

இப்படியான மனோநிலைகளை பெண்கள் தான் தகர்த்தெறிய வேண்டும். கல்வியில், பொருளாதாரத்தில் பெண்கள் ஆர்வம் காட்டவேண்டும். உச்சங்களைத் தொடவேண்டும்.


"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச்
செருக்குமிருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிருளாமறியாமை யில் அவலமெய்தி கலையின்றி வாழ்வு
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்"



என்று பாரதி தன் பெண் விடுதலைப் பாடல்களில் குறிப்பிட்டிருப்பது உயர்வானது. உச்சங்களை அடையும் பொழுதுதான் பெண் எல்லோராலும் மதிக்கப்படுகிறாள். இதைப் பெண்கள் உணர்ந்து கொள்வது தேவையாயிருக்கிறது.

(தொடரும்...)

ஆதிலட்சுமி சிவகுமார்



# சுனாமி – ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

## (23ஆம் அத்தியாயம்)

எனக்கு "யாழ்ப்பாணமே!" என்ற சொல்லைக் கேட்டவுடன் கொஞ்சம் மகிழ்வாக இருந்தது. குரலும் பழகிய குரல்தான்!... ஓ..! இப்போது பெயரும் நினைவில் வந்துவிட்டது! அது என்னுடன் பள்ளியில் படித்த சிநேகிதி கண்ணகி! கொஞ்சம் உடம்பு பருத்திருந்ததால் அடையாளம் தெரியவில்லை. இப்ப முகத்தை வடிவாகப் பார்த்தேன்! அவளேதான்! என்ன!... இன்னும் ஞாபகம் வரல்லையே? அவள் கேட்டபோது எனக்கு வெக்கமாக இருந்தது.

"இல்லை!... நல்லா ஞாபகம் இருக்கு!... கண்ணகி!"

அவள் முகம் மகிழ்ச்சியில் மின்னியது.

"நல்ல காலம்!"

அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்! நானும் புன்முறுவல் செய்தேன். கண்ணகி என்னைக் கொஞ்சம் உற்றுப்பார்த்தாள்! நீ!... இந்த வயதிலும் நல்லாய்த்தானிருக்கிறாய்! நான்தான் சகடையாப் போனன்! அவள் குரலில் தொனித்த பொறாமையை இனங்கண்டுகொண்டேன். படிக்கும்போதே அவளுக்கு என்னில் சற்றுப் பொறாமை! வகுப்பில் இருவரும் போட்டியானவர்கள்! ஆனால்... என்னில் ஏதோ!... ஒரு கவர்ச்சி இருக்குதாம்!... எங்கள் வகுப்பு ஆசிரியர் இப்போது என் நினைவில் வந்து நின்றார். முப்பது வருஷத்துக்கு முந்தி... யாழ்ப்பாணத்திலிருந்து மலைக்குப் படிப்பிக்கவந்த ஆசிரியர்... அவருக்கு மலை வாழ்க்கை அவ்வளவு பிடிக்கவில்லை. போதாக்குறைக்கு பிள்ளைகளும் இல்லை!... அந்த ஆசிரியர்மார் அவரை மறைவில் "மலடன்" என்று சொல்லிக் கதைப்பினம். "மலடன்" என்றால் என்ன என்று எனக்குத் தெரியாத காலம்! கண்ணகி அவருடைய வளர்ப்புமகள்! அதனால்... சில சிக்கல்களும் அவருக்கு இருந்ததாம். அம்மம்மா அவரைப் பற்றிச்சொல்லிய சில விடயங்கள்!... ஒருநாள் அவரே வீட்டுக்கு வந்து அம்மம்மாவிடம் சொன்னவை!... எல்லாமே விளங்காத விடயங்கள்! ஆனால்... இப்போது அவை எல்லாம் நன்றாக விளங்கும்.

"என்னடி கனவு காணுறியே! ஒண்டும் பேசாமல் நிக்கிறாய்?" கண்ணகியின் குரல் என் நினைவைக் கலைத்தது.

"ஒண்டுமில்லை!... பழைய நினைவு வந்திட்டுது."

"எனக்கும் தான்! ஆனால் அதை விட்டிட்டு இப்ப நடக்கிறதைச் சொல்லு..."

அவள் கேட்டபோது மீண்டும் பிள்ளையளின்ர நினைவு... வந்தது. விம்மியபடி சொன்னேன்!... பிள்ளையளைத் துலைச்சுப் போட்டு நிக்கிறன்! கலவரத்துக்க பள்ளிக்கூடம் போனவை வீட்டை வரல்ல... யாழ்ப்பாணம் ஆரோ கூட்டிக் கொண்டு போட்டினம்! எனக்கு அழுகை வந்தது. கண்ணகி திடுக்கிட்டுப்போனாள்!

"என்ன நடந்தது? விவரமாச் சொல்லன்!" நான் நடந்ததைச் சொல்ல... அவள் அதிர்ச்சியோடு கேட்டாள்!

"இப்ப இந்த பஸ்ஸில யாழ்ப்பாணம் போவம்! நானும் போறன். என்னோட வா பிள்ளையளைத் தேடிக் கண்டு பிடித்துத்தாறன்"

எனக்கு ஆறுதலாக இருந்தது. ஆனால் கொஞ்சம் சங்கடமாகவும் இருந்தது. கையில ஒரு சதக் காசில்ல. எப்பிடி யாழ்ப்பாணம் போறது? நான் கொஞ்சம் யோசிப்பது... அவள் விளங்கிக் கொண்டாள்.

"என்ன கையில காசில்ல என்டே யோசிக்கிறாய். நான் காசு குடுக்கிறன். நீ யோசிக்காமல் பஸ்ஸில ஏறு" அவள் கையைப் பிடித்துச் சொன்னபோது...

"கடவுள் போல வந்திருக்கிறாய்!" நல்ல கடவுளைக் கண்டாய். ஏறு பஸ்ஸில... இந்தா இதைப்பிடி! நான் சாமான்களை ஏற்றிப்போட்டு ஏறுவன். அவள் என் கையில் தந்ததை அப்போதுதான் பார்த்தேன். என்ர யோசனைகளில் இதை நான் பார்க்கவில்லை. துணியில் சுற்றிய ஒரு குழந்தை. நான் பக்குவமாக வாங்கி மார்பில் அணைத்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி ஒரு சீற்றில் யன்னல் ஓரமாக இருந்தேன்! "என்னம்மா ரிக்கட் எடுக்காமல் ஏறியிட்டியள்" ரிக்கட் போடு பவரின் குரல் அதட்டலாகக் கேட்டது. "ரிக்கட் நான் வாங்கிப்போட்டன். இஞ்ச கிடக்குது. இரண்டு யாழ்ப்பாணம்"

"சாமானுக்கு ரிக்கட் போடவேணும். அதற்கும் சேர்த்துப் போட்டாச்சு. இவவுக்குச் சாமான் ஒண்டும் இல்ல.

"சரி!.. சரி! சீற்றில இருங்கோ!" கண்ணகி என்பக்கத்தில் வந்து இருந்தாள். நான் குழந்தையை அவளிடம் குடுக்க அவள் சொன்னாள்!

"இது ஒரு புதையல்! மலையில இருந்து யாழ்ப்பாணம் கொண்டு போறன்!" எனக்கு விளங்கவில்லை!

"நான் கலியாணம் செய்து... பிள்ளையளில்லை! அவர் எனக்குப் பிள்ளையள் இல்லையென்று சொல்லி இன்னொரு கலியாணம் கட்டிப் போட்டார். நான் அவரை என்ன செய்யிறது!"

கண்ணகி நவீன கண்ணகியாக நின்றாள்!

"விதியைப் பார்! போன மாதம் அவர் கட்டினவள் மாரடைப்பால் செத்துப்போனாள்! இந்த ஆறுமாதக் குஞ்சு அந்தரிச்சுப் போச்சு என்னட்டைக் கொண்டு வந்து தந்தார்!" அவள் குரலில் இருந்த பரிவு என்னை ஏதோ செய்தது. தாயற்ற இந்தக் குழந்தையை அவள் வளர்க்கிறாள்!

"நான் அவரை முதலில் யாழ்ப்பாணம் போகச் சொல்லிப் போட்டன். அவர் எங்கட சீதனவீட்டை திருத்திப் போட்டார். இனிமேல் அங்கதான் இருக்கப் போறம்!" "பிள்ளைக்கு என்ன பெயர்?"

"துளசி எண்டு வைச்சிருக்கிறன்! அவையள் வாயுக்கை நுழையாத பேர் ஒண்டு வச்சிட்டினம்! நான் வீட்டுப்பெயர் வைச்சிட்டன்.

"நல்லபெயர்! சின்னப்பெயர்!" நான் சொன்னபோது அவள் மகிழ்ச்சியோடு சொன்னாள்!

"நீதான் பெயர் நல்ல தெண்டு சொன்ன முதல் ஆள்! எல்லாரும் பழைய பெயர் எண்டு சொல்லிச்சினம்!" இப்ப துளசி சிணுங்கியது!... பிள்ளைக்குப் பசி வந்திட்டு போல! சொல்லிக் கொண்டே கண்ணகி காலடியில் வைத்திருந்த கூடையிலிருந்து பால்ப் போச்சியை எடுத்தாள்! துளசியும் குரல்



கொடுக்கவே பஸ்ஸில் இருந்த மற்றவர்களும் எங்கள் பக்கம் திரும்பிப் பார்த்தனர். நான் கண்ணகியிடம் துளசியைக் கொடுத்தேன்! அவள் குழந்தையை வாங்கிப் பக்குவமாய் மடியில் கிடத்திப் பாலைப் புகட்டினாள். துளசி பொச்சுப் பொச்சுப் எண்டு பாலை விரைவாக உறிஞ்சியது!

"இது பசி பொறுக்காது! சரியா தகப்பனைப் போலத்தான்!" கண்ணகி சொல்லிய போது அவள் உள்ளத்தில் பொங்கிய இயற்கையான தாய்மை!... கடவுளே! இவள் கையில் இந்தக் குழந்தை வளரவேண்டும் என்று தீர்மானித்தா தாயை நீ அழைத்துக் கொண்டாய்! தாய்மை என்பது பெண்களின் தனியான உணர்வுதான். நான், அம்மா, அம்மம்மா... கண்ணகி எல்லாரும் தொடர்சங்கிலியாக இந்த உணர்வால் நிரம்பிய வர்கள்!... "என்ன யோசிக்கிறாய்...? நீ ஒண்டுக்கும் யோசிக்காத! நான் துளசியின்ர அப்பாவிட்டைச் சொல்லி உன்ர பிள்ளையளைத் தேடிக்கண்டு பிடிச்சுத்தாறன்!" "கண்ணகி! எனக்கு யாழ்ப்பாணமே தெரியாது! இது தான் முதல் தடவை யாழ்ப்பாணம் போறன்!"

"நீ எங்கட வீட்டில தங்கலாம்!... அது பெரிய வீடுதான்! எத்தினை பேரும் நிக்கலாம்! நாற்சாரவீடு... என்ர அம்மாவின்ர சீதனவீடு... பிறகு எனக்கு சீதனமாக எழுதித் தந்தவை... நான் அதை துளசிக்கு கொடுக்கவேணும்!..."

கண்ணகி யாழ்ப்பாணத்துச் சீதன முறைமையை மிக எளிமையாக எடுத்துச் சொல்லிவிட்டாள். இப்ப எனக்கு வீட்டு ஞாபகம் வந்தது! நான் யன்னலுக்கு வெளியே பார்த்தேன்! பலதகர வீடுகள்!... மலையில கனக்கத் தகரத்தால கட்டின வீடுதான். பஸ் என்.சீ றோட்டால போய்க் கொண்டிருந்தது. எங்கட வீட்டை அண்மித்துக்கொண்டிருந்தது.

"உங்கட வீடு எங்கே இருக்கிறது?" கண்ணகி யின் கேள்விக்கு மெல்லப் பதில் சொன்னேன். இந்த றோட்டிலதான்!... அங்க ... அந்தவீடுதான்! நான் கையால் காட்டினேன்! அவள் யன்னலால் எட்டிப்பார்த்தாள்!

"புதுவீடு போல கிடக்கு! எப்ப கட்டினியள்?"

"இப்ப கொஞ்சக் காலம் தான் இந்த வீட்டி ற்கு வந்து... அதுக்கிடையில் எல்லாம் தலைகீழாய்ப் போச்சுது..!"

என்கண்களில் ஊற்றெடுத்தது கண்ணீர்... கண்ணகியின் அடுத்த கேள்வி என் காதில் கேட்டது. உன்ர அவர் எங்க போட்டார்?...! நான் ஊமையானேன்!... சொல்ல விருப்பமில்லாவிட்டால் விடு!... நானும் உன்னைப் போல ஒரு காலத்தில் அவரைப் பற்றிப் பேசாமல் இருந்தன்! எனக்கு உன்ர நிலை நல்லா விளங்குது!

அவள் துளசியை என்னிடம் தந்தாள்! அது என்னைப் பார்த்துச்சிரித்தது! (தொடரும்)

# தாய்மை உணர்வினைக் கொல்லும் கருத்தலைப்பு...

கருக்கலைப்பு என்றவுடன் முறை தவறியமை பற்றிய எண்ணக் கருவே அனைவரிடத்திலும் முதன்மை பெறும். ஆனால் இது அப்படிப்பட்ட ஒரு கருக்கலைப்பல்ல. தாய்மைக்குப் பங்கம் விளைவிக்கின்ற, தாம்பத்திய உறவில் ஈடுபட்டபின்பு தமது குடும்ப நடைமுறைச் சிக்கல்களுக்காக மேற்கொள்ளப்படும் கருக்கலைப்பு நடவடிக்கையாகும்.

நாகரிக வளர்ச்சியும், அதனோடுகூடிய மக்களின் எதிர்ப்பும் இன்று உயிராபத்து வரை சென்றுவிட்டது. நாகரிக வளர்ச்சிக் கேற்ப ஆளணிகளை மட்டுப்படுத்த முற்படும் நாம் – நாகரிக அறிவு வளர்ச்சியோடு திட்டமிட்ட தாம்பத்திய உறவினை ஏன் மேற்கொள்ள மறந்து விடுகின்றோம் என்பது தான் புரியாத புதிராக உள்ளது. எத்தனையோ இயற்கையான கருத்தடை முறைமைகள் தற்போது நடைமுறையில் இருந்த போதும், ஏன்கருக் கலைப்பு வரை மக்களின் வாழ்க்கை முறைமைகள் செல்கிறது என்பதுதான் அநாகரிக வெளிப்பாட்டின் அர்த்தத்தை தெளிவு படுத்தி நிற்கிறது.

கொழும்பு மருத்துவ பீட பேராசிரியர் இது பற்றி கருத்து வெளியிடுகையில் – இலங்கையில் தினமும் 3500 பேர் சட்ட விரோத கருக்கலைப்பு நடவடிக்கையினை ஈடுபடுவதாகவும், இதில் திருமணமான பெண்களே அதிகம் ஈடுபடுவதாகவும், உலகில் 19 மில்லியன் கருக்கலைப்புகள் 1 வருடத்தில் பாதுகாப்பற்ற ரீதியில் இடம்பெறுவதாகவும், இதனால் சுமார் 60 ஆயிரம் பெண்கள் உயிரிழப்பதாகவும், ஏனையோர் பின்விளைவினால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

"உணர்ச்சிகள் என்பது – உயிரினத்தின் உலகியல் இன்பங்களில் ஒன்று" இதனை சமூக அங்கீகாரத்தோடு நடைமுறைப்படுத்துவது தப்பான ஒரு விடயமல்ல. இதனைத் தாம்பத்திய உறவில் கட்டுப்படுத்துவது உளவியல்ரீதியாக ஆரோக்கிமான ஒன்றல்ல. உணர்ச்சிகளின் பகிர்வுதான் இல்லறத்தில் இறைமைக்கு நிகரான புனித



மானவிடயம். இதனால் உண்டாகும் பிள்ளைச் செல்வமென்பது தாம்பத்திய வாழ்வின் தன்னிகரற்ற வெற்றி இலக்கு.

இப்படிப்பட்ட புனிதங்கள் ஏன் தற்கால சமூகத்தில் புனிதத்துவங்களை இழந்துள்ளன?... என்பதனை அவரவர் சிந்தனைக்கு விட்டுவிட்டு விலகி விடலாம். ஆனால் உயிராபத்து என்கின்றபோது இது பற்றி சற்று சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.


எமது தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய எமது பண்பாட்டுக்கே உரித்தான சிறப்புகள் பொருந்திய தாய்மை உணர்வுகள், துஷ்பிரயோகப் படுத்தப்படுவது ஒரு புறமிருக்க, இப்படிப்பட்ட செயற்பாடுகள் ஏன் இடம்பெறுகின்றது என்பது பற்றி சிந்தித்தோமானால், இது அவரவர் தனிப்பட்ட குடும்ப எதிர்பார்ப்புக்களாலேயாகும் என்பது தெரியவரும். இதனை விமர்சிப்பது இதில் பொருத்தமற்ற ஒன்று. ஏனெனில், குழந்தை வேண்டும், வேண்டாம் என்கின்ற முடிவானது – பல பின்னணிக்காரணங்களினூடாக தோற்றம் பெறலாம்.

அப்படியானால், இந்த உயிரிழப்புக்களை எப்படித்தவிர்ப்பது, எமது சமூகத்தவரை இப்படிப்பட்ட இழப்பில் இருந்து எப்படி மீள வைப்பது என்று சிந்திப்பதே எமது எழுத்துருக் கடப்பாடாக உள்ளது. இன்றைய எமது நாகரிக வளர்ச்சியில் இயற்கையான கருத்தடை முறைமைகள், செயற்கையான கருத்தடை முறைமைகள் என இரண்டு முறைமைகள் உண்டு. இவற்றில் ஆணுறைகளினைப் பயன்படுத்தும் இயற்கையான கருத்தடை முறைகளினால் எவ்வித பக்கவிழைவுகளும் ஏற்படாது என மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனை விட செயற்கையான கருத்தடை முறைகளான – மாத்திரைகள், ஊசிமருந்துகள், சத்திரசிகிச்சைகள் என்பன பக்கவிளைவு கொண்டவை என கூறுகின்றனர். எமது பண்பாட்டையும், எமது கலாசாரங்களையும் மாறாகவிளங்கி இது பற்றிய விடயங்களை அறிய மறந்தவர்களாக இருப்பதனால்தான் இன்று எமது சமூகத்தில் உள்ள பல தம்பதிகள் உடலியல் உளவியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்கின்றனர். இப்படிப்பட்ட கருக் கலைப்பு வரை செல்லமுனைகின்றனர். செக்ஸ் என்பது முறைமைக் கூடாக அணுகினால், அது தெய்வீகம். முறைதவறினால் அது அநாகரிகம். ஆகவே இது பற்றி அறிவது, தெரிவது தப்பு எனும் கொள்கையில் இருந்து, எமது சமூகம் எப்போது மீள்கின்றதோ, அன்றுவரை இப்படிப்பட்ட உயிராபத்தை ஏற்படுத்தும் கருக் கலைப்புக்கள் இருந்தவண்ணமே இருக்கும். இதற்கான மூலகாரணம் கருத்தடை முறைமைகள் பற்றிய போதிய அறிவு இல்லாமையே.

– ஆர்.கே.மேனன் –

# தமிழீழ கடற்படை - துணைப்படையின் மூன்றாவது அணிக்கான பயிற்சி ஆரம்பம்





வடமராட்சி

வடமராட்சியில் மாவீரர் கடற்புலி லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்ரர் நினைவாக தமிழீழ கடற்படையின் துணைப்படையின் மூன்றாவது அணியினருக்கான பயிற்சி நேற்று முன்தினம் தொடங்கியது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள கடற்புலி லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்ரர் கடற்புலிகளின் துணைப்படை பயிற்சிக் கல்லூரியில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு இந்தப் பயிற்சிகள் தொடங்கின.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றிவைத்தார். மாவீரர் லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்ரரின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இதையடுத்து பயிற்சிகள் தொடங்கின. இந்த மூண்றாவது அணியில் 120 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். தொடக்க நாள் நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

## வட்டக்கச்சி - சுவிக் சென்ரர் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் வீரமுரசும்

வட்டக்கச்சி

வட்டக்கச்சி சுவிக் சென்ரர் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் வீரமுரசு நிகழ்வும் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு தேசிய எழுச்சி பேரவை செயலாளர் பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் குமுதன் ஏற்றிவைத்தார். முதல் மாவீரர் சங்கரின் திருவுருவப்படத்துக்கான சுடரை துயவன் அரசறிவியற்கல்லூரி போராளி கண்ணாளன் ஏற்றிவைத்தார். முதல் பெண் மாவீரர் மாலதியின் திருவுருவப் படத்துக்கான சுடரை தமிழ்ச்சுடரின் தந்தை ஏற்றிவைத்தார்.

கரும்புலிகளின் பொதுப்படத்துக்கான சுடரை சுவிக் சென்ரர் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன் ஏற்றிவைத்தார். முதல் கரும்புலி மில்லரின் திருவுருவப் படத்துக்கான சுடரை மாவீரர் ஈஸ்வரனின் பெற்றோர் ஏற்றி வைத்தனர்.

முதல் பெண் கரும்புலி அங்கயற்கண்ணியின் திருவுருவப் படத்துக்கான சுடரை வட்டக்கச்சி உப தபாலதிபர் திருமதி றோகன் ஏற்றிவைத்தார்.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கான சுடரை வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பத்மநாதன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான சுடரை தேசிய எழுச்சி பேரவை பொருளாளர் சந்திரன் ஏற்றிவைத்தார். கிட்டு உட்பட 10 வேங்கைகளின் திருவுருவப்படத்துக்கான சுடரை வட்டக்கச்சி வர்த்தக சங்கத் தலைவர் சந்திரன் ஏற்றிவைத்தார். குமரப்பா புலேந்திரன் உட்பட்ட 12 வேங்கைகளின் திருவுருவப் படத்துக்கான சுடரை துளசிதரனின் தந்தை ஏற்றிவைத்தார்.

வட்டக்கச்சி சுவீக் பிரதேச மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரை அவர்களின் பெற்றோர், உறவினர்கள் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் கௌசலா நிகழ்த்தினார். சிறப்புரைகளை வட்டக்கச்சி மகாவித்தியாலய ஆசிரியர் சுதர்சன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

(09)

## தொலைபேசி இணைப்புகள் செயலிழப்பு

வவுனியா

வவுனியா நகரில் ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புகள் அடிக்கடி செயலிழப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனை சீர்செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## கலாசார மண்டபத்தில் தங்கியுள்ள இராணுவத்தினரை அகற்ற கோரிக்கை

வவுனியா குடியிருப்பு பிரதேசத்திலுள்ள கலாசார மண்டபத்தில் இராணுவத்தினர் தொடர்ந்து தங்கியுள்ளனர்.

இந்த மண்டபத்தை பொது மக்களின் பாவனைக்காக விடுவிக்கக்கோரி பல முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும், வசதியான வேறொரு இடம் கிடைக்கும் வரை கலாசார மண்டபத்தை விட முடியாது என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இந்த மண்டபம் அமைக்கப்பட்ட நாள் தொடக்கம் இராணுவத்தினரே இதில் தங்கியுள்ளனர். நகரின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கலாசார மண்டபத்தை விடுவிப்பதற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோருகின்றனர்.

## கிராமிய அபிவிருத்தி வங்கியால் 233 குடும்பங்களுக்கு கடனுதவி

கிளிநொச்சி

மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக கடன்களை வழங்கி வரும் கிராமிய அபிவிருத்தி வங்கி - கடந்த ஓகஸ்ட் மாதம் 233 குடும்பங்களுக்கு ஒரு கோடியே 19 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்தக் கடன் தொகையில் மின்சாரம் அற்ற பகுதிகளில் உள்ள 83 குடும்பங்களுக்கு சூரிய ஒளி மின்கலம் மூலம் மின்சாரத்தை பெறுவதற்காக 36 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாவும், விவசாயிகளின் மத்தியில் உள்ள அறுவடைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு 5 விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக 14 இலட்சத்து 64 ஆயிரத்து 700 ரூபாவும் வழங்கப்பட்டது.

## தேசிய உணர்வு எழுச்சிக்கான காலமாக இவ்வாரத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு

வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட எழுச்சி மாநாட்டை உணர்வுபூர்வமாக நடத்துவதற்கு மக்கள் தயாராகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த எழுச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு எழுச்சி கீதங்கள் இசைக்கப்படுவதுடன், மாநாட்டின் முக்கியத்துவம் குறித்தும், சிங்கள தேசத்தின் பச்சோந்தி அரசியல் குறித்தும் விளக்கப்பட்டு வருகிறது.

வீதி எங்கும் எழுச்சியூட்டும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகள் கட்டப்பட்டுள்ளன. தேசியத் தலைவரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட அலங்கார வளைவுகள் முக்கிய இடங்களில் நிர்மாணிக் கப்பட்டுள்ளன.

இதே வேளை செயலணிக் குழுவின் செயற்பாடுகளும் மிகவும் தீவிரமாக இடம்பெற்று வருகிறது. இந்த எழுச்சி மாநாட்டை உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்காக அனைவரும் முன்வந்து செயல்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மக்கள் இந்த வாரத்தை முல்லைத்தீவு மாவட்ட எழுச்சி மாநாட்டு வாரமாக முன்னெடுக்கவுள்ளனர். எமது மக்களின் எழுச்சியை சர்வதேசமும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற மன உணர்வுடன் பொது மக்கள் அனைவரும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வெ)

## காலச் சுவட்டில்...

### செப்ரெம்பர்-09 இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

1850 : கலிபோர்னியா அமெரிக்காவின் 31 ஆவது மாநிலமாக இணைந்தது.

1896 : முதன் முதலாக இருதய அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பிராங்க் பர்ட் மருத்துவமனையில் லூயிஸ் ரென் என்பவர் இருதயப் பகுதியில் கத்திக்குத்து காயப்பட்டிருந்த ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து தையல் போட்டார்.

1918 : படைவீரர்களை உற்சாகப்படுத்த போர்முனைக்குச் சென்ற இரண்டு பிரான்சிய அமைச்சர்கள் குண்டுபட்டு இறந்தனர்.

1936 : பிரான்ஸும் - சிரியாவும் நட்புறவு உடன்படிக்கை செய்து கொண்டன. பிரான்ஸ் மூன்று வருடகாலத்துள் சிரியாவில் தனது மேலாதிக்கத்தை விட்டுவிட ஒத்துக் கொண்டது. சிரியா சர்வதேச சங்கத்தில் சேர்ந்துகொள்ள சம்மதித்தது.

1944 : இந்திய பிரிவினையைத் தவிர்க்கும் முகமாக காந்தி - ஜின்னா பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

1947 : கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அமெரிக்காவில் மாஸாசூஸட்டில் நீதம் என்ற இடத்தில் காலமானார்.

1954 : அல்ஜீரியாவின் ஆர்லியன்ஸ் வில்லா என்ற இடத்தில் நடந்த நில நடுக்கத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர்.

1965 : இந்தியா - பாகிஸ்தான் போரில் விஷேடமாகக் குறிப்பிடப்படும் பர்க்கி போர் நிகழ்ந்தது. பலத்த சண்டையின் மத்தியில் பர்க்கியை இந்தியப் படையினர் வெற்றி கொண்டது.

1970 : இந்தியாவின் மும்பை நகரில் இருந்து லண்டனுக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் பெர்ஷியன் குடா அருகில் வைத்து தீவிரவாதிகளால் ஜோர்தானுக்குக் கடத்தப்பட்டது.

1972 : சர்வாதிகாரியான இடி அமீன் உகண்டாவில் குடியேறியுள்ள ஆசியாவைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் உடனடியாகவே நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார்.

1975 : செவ்வாய்க் கிரகத்தில் தரையிறக்கும் நோக்குடன் அமெரிக்கா வைகிங் - 2 என்ற விண்கலத்தை அனுப்பியது.

* :18 வயதே நிரம்பிய செக்கோஸ் சுலோவாக்கியாவைச் சேர்ந்த ரெனிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா அமெரிக்காவிடம் அரசியல் தஞ்சம் புகுந்தார்.

1976 : தனது ஏழு வயதிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் பால் ஈர்க்கப்பட்டவரும், 40 ஆண்டுகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தவரும், பெரும் மக்கள் புரட்சியுடன் 1949 இல் சீனாவில் கம்யூனிஷ அரசை நிறுவியவரும், சீன மக்கள் குடியரசு உதயமாக காரணமாக இருந்தவருமான மாஸேதுங் மரணமடைந்தார்.

1988 : தாய்லாந்தில் பாங்கொங் அருகே மின்னல் தாக்கியதால் ஒரு ஜெட் விமானம் நொருங்கி வீழ்ந்தது.

1991 : தஜகிஸ்தான் சுதந்திர நாடு உதயமாகியது.

* : பல்கேரிய தேசிய விடுதலை தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

கற்றோர் மத்தியிலிருக்கும் அறிவாளி பார்வையற்றோர் மத்தியில் இருக்கும் அழகனைப் போன்றவர்.

- சா அதி -

## நமது நோக்கு

# செயலற்றுப்போகும் உடன்பாடுகளும்; அஸ்தமனத்தை நோக்கும் சமாதானமும்!

போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக கடந்த மூன்றாண்டுகளாக அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்த போராளிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மீள அழைத்துக்கொண்டமையானது- சமாதான சூழலுக்கு படைத்தரப்பினராலும், அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களாலும் ஏற்பட்டுள்ள ஆபத்துமிக்க அச்சுறுத்தலை துல்லியமாக வெளிக்காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்த முடிவு மிகச்சரியானதும், தவிர்க்கமுடியாததுமான ஒன்றேயாகும்.

கடந்த சில வாரங்களாக ஆயுதம் தாங்கியோரால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளும், அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கான அலுவலகங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களும் வெளிப்படையான போர்நிறுத்த உடன்பாட்டு மீறல்களேயாகும்.

இதனைச் செய்பவர்கள் இனந்தெரியாத ஆயுதக்குழுக்கள் என அரசதரப்பும் படைத்தரப்பும் பட்டியலிட முயன்றாலும்- அவர்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்தே ஆயுதபாணிகளாக இராணுவ காவலரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளைக் கடந்து வந்து தாக்குதலை மேற்கொண்டுவிட்டு அதே பகுதிக்குள் சென்று பாதுகாப்பாக மறைந்துவிடுகிறார்கள் என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களுக்கும், உயிராபத்துக்களுக்கும் முகம்கொடுத்தபடி நிராயுதபாணிகளாக அரசியல் பணி செய்வதென்பது சாத்தியமில்லை என்ற தீர்மானத்துக்கு புலிகள் தரப்பினர் வந்தமையானது- சமாதான காலத்திலும் தமக்கு எந்தவித பாதுகாப்பு உத்தரவாதத்தையும் அரசோ, படைத்தரப்போ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ தரப்போவதில்லை என்ற உறுதியான முடிவை எடுத்ததனாலேயாகும்.

எத்தனையோ போராளிகளை அவர்கள் சமாதானத்தின் பேரால் இழந்துள்ள சூழலில், போர்நிறுத்த உடன்பாட்டின் எந்த ஒரு முக்கியமான அம்சத்தையும் ஆத்மார்த்தமாக நிறைவேற்றும் விருப்பற்ற ஆட்சியாளருடனும், அவர்களுக்கு கீழ் செயறபடும் படையினரதும் நடவடிக்கைகள் யாவும் அமைதிச் சூழலை நிர்மூலம் செய்யும் உள்நோக்குடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இனிமேலும் புரிந்துணர்வு உடன்பாட்டை நம்பி, இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளை நிராயுதபாணிகளாகத் தொடர்வதில் நம்பிக்கை கொள்ளல் முட்டாள்தனமானதாகவே இருக்கும்.

படைக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலான புலிகளின் அரசியல் பணிகளின் முடக்கம் என்பது பொதுமக்களிடையே மீண்டும் போர்ச்சூழல் ஏற்படுமோ என்ற அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

ஏற்கனவே அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ள சூழலில் தென்பகுதி அரசியலில் பௌத்த - சிங்கள பேரினவாத சக்திகள் யாவும் ஒன்றிணைந்து சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தை முற்றாகவே துவம்சம் செய்யும் உறுதியான - வெளிப்படையான கருத்து நிலைப்பாட்டில் அணிசேர்ந்துள்ள நிலையில் போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இனிமேலும் அர்த்தமுள்ள - அமைதி நிலையை உத்தரவாதப்படுத்துமளவுக்கு சாதகமான ஒன்றாக இருக்கும் என நம்புதல் கடினமேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் இன்னமும் குறிக்கப்படாத நிலையிலேயே அடுத்துவரும் ஜனாதிபதி எத்தகைய உள்நோக்கத்துடன் ஆட்சியைத் தொடரப்போகிறார் என்பது தீர்மானிக்கமுடியாத ஒன்றாக இருக்கும் சூழலில், தற்போது பதவியில் இருப்பவரால் - அதிகாரவலு உள்ளவரால் - இன்னும் இரு மாதங்கள்வரை ஆட்சியிலிருக்கும் உறுதியுடன் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் சக்தி உள்ளவரால், இன்று சமாதானத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண முடியாத சூழல் உள்ளதெனில் தென்பகுதியில் சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் அழுத்தம் எவ்வளவு கனதி கொண்டதாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இதனைத்தான் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்த உடன்பாட்டை படைத்தரப்பு நெருக்கடி நிலைக்குள் தள்ளியுள்ளது! எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.


அவரின் இந்தக் கூற்று தெரிவிக்கும் செய்தியின் ஆழத்தை சகல தரப்பினரும் குறிப்பாக சமாதானத்தை வலியுறுத்திவரும் சர்வதேச சமூகத்தினரும், நோர்வே அனுசரணையாளர்களும்- சிறப்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் புரிந்துகொள்ளுதல் அவசியமேயாகும்.

இதேநிலை மேலும் தொடர்ந்து நிழல் யுத்தத்தை அரசு அரசியல் அழுத்தங்களின் பேரிலும், உள்நோக்குடனும் தீவிரமாக்கும் நிலை நீடிக்குமேயானால் இதே நிழல் யுத்தம், நிஜ யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் பேரினவாத - சமாதான விரோத சக்திகளின் நோக்கத்தை எட்டவைத்துவிடும் என்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

இன்னொரு தடவை 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தத்துவத்தை அரசு நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அரசும்- பேரினவாத சக்திகளும் அரசியல் மற்றும் போர்வியூகங்களை வகுக்கமுயலுமேயானால் அது முழுநாட்டையும் பேரழிவுக்குட்படுத்தும் என்பதைக் கூறவேண்டியதும் அவசியமேயாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# கோடி கையெழுத்துடன் ஐ.நா சபைக்கு தமிழர் அனுப்பிய மகஜரைப் பார்க்கட்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன. விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலரும் பொது மக்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். இதேசமயம் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் அதிரடிப்படையினரால் சோதனையிடப்பட்டிருக்கின்றன. தாக்குதல் நடத்துபவர்கள் மீதுதான் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். இங்கு தாக்கப்பட்டவர்களின் அலுவலகங்களில் தேடுதல் நடத்துகிறார்கள். இது என்ன விநோதம் என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

இலங்கையில் இதுவொன்றும் விநோதமில்லை. வழமையாக நடைபெறும் நிகழ்ச்சிகள்தானிவை. மட்டக்களப்பு மாவட்டத்தில் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கொழும்பில் தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

இவர்கள் வெள்ளை வானில் கடத்திச்செல்லப்பட்டு கைகளும், கண்களும் கட்டப்பட்ட பின்னர் சித்திரவதை செய்யப்பட்ட பின் சுட்டுக்கொல்லப்பட்டு வீதிகளில் கிடக்கக் காணப்படுகிறார்கள். கொழும்பில் தமிழ் மக்கள் தங்கியிருக்கும் வீடுகள், விடுதிகள் பழையபடி தேடுதல்களுக்கும், சோதனைகளுக்கும் உள்ளாகின்றன. தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகிறார்கள். சித்திரவதை பற்றிச் சொல்லத் தேவையில்லை. தேடுதலும் தடுத்து வைக்கப்படுவதுமே போதும். அவர்கள் சித்திரவதைப் படுவதற்கு! தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இலங்கையில் மீண்டும் சந்தேகத்துக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள் என்று சொன்னேன்.

தமிழ் மக்கள் சந்தேகத்துக்குரியவர்களாகத் தேடிப் பிடிக்கப்படுவதும் விசாரணைக்காக இவர்கள் கொண்டு செல்லப்படுவதும் ஒரு புறமிருக்க கொழும்பில் வந்திறங்கும் தமிழ் இளைஞர்களும் வேறு இடங்களில் கடத்தப்பட்டுக் கொண்டு வரப்படும் தமிழ் இளைஞர்களும் சித்திரவதைக்குப் பின் சடலங்களாக மீட்கப்படுகிறார்கள். இந்த அநியாயங்களைப் பற்றி யாரும் வாய் திறந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இரத்தினசிறி உட்பட நம்மடை வால் பிடிகளும் கூட "பயங்கரவாதம்" பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனர் என்று பரமசிவம் சொன்னார்.

"பயங்கரவாதம் ஆபத்தானதுதான் ஆனால், அதை விட அரச பயங்கரவாதம் மிகக்கொடியது'' என்று மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சரியாகச் சொல்லியிருந்தார். இங்கு அரச பயங்கரவாதத்தை மறைப்பதற்காக "கொல்லுகிறார்கள், கொல்லுகிறார்கள்'' என்று கூச்சலிட்டுப் பின்னர் "பயங்கரவாதம்" அதை ஒழிப்பதில் உலக நாடுகளுடன் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்று குரல்கொடுத்து இனப் படுகொலையைத் தொடர்வதற்கு வெற்றிகரமாகத் திட்டமிட்டுச் செயற்படுகிறார்கள் என்று சொன்னேன்.

கருணா என்ற ஒரு கோடரிக்காம்பைப் பிடித்து வைத்துக்கொண்டு அதன் பெயரில் கிழக்கில் படுகொலைகளைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். கருணா உண்மையிலேயே சுயநினைவுடனிருந்தால் இதுவரை தனது பெயரில் கொலைகள்தான் தொடர்ந்து கொண்டிருக்கின்றனவேயொழிய வேறு எதுவுமே உருப்படியாகக் கிழக்கு மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை உணராமல் இருப்பாரா? தனது பெயரில் தனது மட்டக்களப்பு மக்களே அநியாயமாகக் கொல்லப்படுவதை அறிந்தும் பேசாமல் இருப்பாரா? என்று பரமசிவம் கேட்டார்.

கோடாரிக்காம்பை எவர் எப்படிப் பயன்படுத்துகிறார்களோ; அது எப்படி என்ன நிலையில் இருக்கிறதோ? என்றாலும் ஒருநாள்அதுஉண்மையை வெளியிடவேண்டிவரலாம் என்றேன்.

போராளிகள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து அரச கட்டுப்பாட்டில் அமைதிச்சூழ்நிலையில் பாதுகாப்பாக இருக்கமுடியாதென்ற நிலையில் விடுதலைப் புலிகள் அரசியற்பணிகளை நிறுத்திவிட்டு தங்கள் நிர்வாகப் பகுதிக்குத் திரும்பிவிட்டார்கள். இனி என்ன நடக்கும் என்று பரமசிவம் கேட்டார்?

போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலையை அரச படைத்தரப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் போர்நிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறதென்று தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதைக் கவனித்தீரா என்று நான் கேட்டேன்.

நோர்வே பிரதிநிதியும் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியும் தமிழ்ச்செல்வனைச் சந்திக்கச்சென்றார்களே என்று பரமசிவம் கேட்டார்.

அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். இலங்கையைப் பற்றியும் இங்குள்ள ஆட்சி அதிகாரங்கள் பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்புக்கிடைத்திருக்கிறது என்றேன்.

ஐ.நாவைத் தலையிட வேண்டுமென்றும், தலையிடாவிட்டால் உலகப் பிரச்சினையாகிவிடும் என்றும் சொல்லுகிறார்களே என்றார் பரமசிவம்.

ஈழத்தமிழர் நிலைபற்றி முன்பு கலைஞர் மற்றும் தமிழகம் கோடி கையெழுத்துத் திரட்டி அனுப்பிய மகஜரை ஐ.நா. அதிகாரிகள் எடுத்துத் தூசிதட்டிப் பார்க்கட்டும் என்று சொல்லி எழுந்தேன். பரமசிவமும் நடந்தார்.

# ஏழைகளென்றால் ஏமாற்றலாகுமா...?

## வாசகர் நோக்கு

நேற்றுமுன்தினம் வாசகர் நோக்குப் பகுதியை வாசித்தபோது, மனதைச் சஞ்சலப்படுத்தும் கருத்தொன்று தெளிவாகியது. தென்மராட்சிப் பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வாக்குமூலத்திலிருந்து தாங்களே மக்களின் குடும்ப நிலையை அவதானித்து, சமுர்த்தி நிவாரண முத்திரைகளைப் பெறத் தகுதியான குடும்பங்களைத் தெரிவுசெய்ததாக அந்த உத்தியோகத்தர்கள் கூறியமை தெரியவந்தது. ஆனால் அதற்கு எதிர்மாறாக - தங்களுக்கும் இந்தத் தெரிவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும், கொழும்பிலிருந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதென்றும் - போதாக் குறைக்கு கணினிகளின் மேல் பழியைப் போட்டு மிகவும் புத்திசாலித்தனமாகத் தப்ப முயன்றுள்ளனர் வடமராட்சிப் பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

"இருந்தாலும் நீங்கள் மேன்முறையீட்டுக் கடிதங்கள் தாருங்கள். நாங்கள் முயற்சிசெய்து பார்க்கிறோம்'' எனக்கூறி மக்களைச் சமாதானப்படுத்தியிருப்பது பாராட்டப்படவேண்டியதே. ஆனால் நிவாரண முத்திரைகள் உரியவர்களுக்கு - வசதியில்லாதவர்களுக்குக் கிடைக்குமா என்பதுதான் கேள்விக்குரிய விடயமாகும்.

சம்பந்தப்பட்டவர்கள் தமிழ் மக்களை - அதுவும், கஷ்ட நிலையிலுள்ள எமது மக்களை ஏமாற்றாமல் இருப்பது நல்லதும் வரவேற்கப்படவேண்டியதுமாகும். உரியவர்கள் இதைக் கவனிப்பது கட்டாயமானது.

பருத்தித்துறை — சீனா மருது

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.

பிரதேச ரீதியாகத் தெரிவானோரின் விபரம் வருமாறு:

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

நேற்றைய தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| 989 | யா/சா/8758 | திருமதி. சின்னம்மா வேலுப்பிள்ளை |
| 990 | யா/சா/8763 | திருமதி. சிவஞானம் கந்தையா |
| 991 | யா/சா/8780 | திரு. சுப்பிரமணியம் கந்தையா |
| 992 | யா/சா/8782 | திரு. கதிரன் சின்னத்தம்பி |
| 993 | யா/சா/8790 | திரு. வல்லிபுரம் பேரின்பநாயகம் |
| 994 | யா/சா/8795 | திருமதி. லீலாமணி மாணிக்கவாசகர் |
| 995 | யா/சா/8811 | திருமதி. பூரணம் சின்னத்தம்பி |
| 996 | யா/சா/8823 | திரு. காசிப்பிள்ளை இராசையா |
| 997 | யா/சா/8860 | திரு. தோமஸ்போஜேய் தருமரத்தினம்பேசியேல் |
| 998 | யா/சா/8861 | திரு. நாகநாதி கணபதிப்பிள்ளை |
| 999 | யா/சா/8884 | திரு. சரவணமுத்து கனகசபை |
| 1000 | யா/சா/ 8892 | திருமதி. இராசம்மா சுப்பிரமணியம் |
| 1001 | யா/சா/8922 | திருமதி. வள்ளியம்மை ஆறுமுகம் |
| 1002 | யா/சா/8930 | திரு. வேலன் கந்தசாமி |
| 1003 | யா/சா/8933 | திரு. செபஸ்தி சூசை |
| 1004 | யா/சா/8951 | திரு. கொத்தன கறுவல் |
| 1005 | யா/சா/8976 | திரு. வீரகத்தி பொன்னையா |
| 1006 | யா/சா/8985 | திருமதி. செல்வராணி அந்தோனிப்பிள்ளை |
| 1007 | யா/சா/9023 | திருமதி. கமலாம்பிளை வேலாயுதபிள்ளை |
| 1008 | யா/சா/9025 | திரு. சிவசுப்பிரமணியம் துளசிங்கம் |
| 1009 | யா/சா/9028 | திரு. சுப்பிரமணியம் அரியரத்தினம் |
| 1010 | யா/சா/9030 | திரு. பொன்னுச்சாமி மயில்வாகனம் |
| 1011 | யா/சா/9034 | திரு. வீரகத்தி சண்முகசுந்தரம் |
| 1012 | யா/சா/9055 | திருமதி. நல்லம்மா சுப்பிரமணியம் |
| 1013 | யா/சா/9088 | திரு. கணபதி குஞ்சன் |
| 1014 | யா/சா/9124 | திருமதி. திரேசம்மா சிங்கராயர் |
| 1015 | யா/சா/9132 | திரு. நல்லதம்பி குமரேசு |
| 1016 | யா/சா/9163 | திருமதி. செல்லக்கண்டு கனகரத்தினம் |
| 1017 | யா/சா/9200 | திரு. சின்னையா வீரசிங்கம் |
| 1018 | யா/சா/9230 | திரு. சுங்கிலி ஆறுமுகத்தான் |
| 1019 | யா/சா/9245 | திருமதி. அமிர்தரத்தினம் நடராசா |
| 1020 | யா/சா/9271 | திரு. தாமோதரம்பிள்ளை கந்தவனம் |
| 1021 | யா/சா/9288 | திரு.சின்னத்தம்பி துரைரத்தினம் |
| 1022 | யா/சா/9300 | செல்வி. உமையம்மா கணபதிப்பிள்ளை |
| 1023 | யா/சா/9338 | திருமதி. கனகம்மா நடுவிலான் |
| 1024 | யா/சா/9361 | திரு. முத்தன் சிவலை |
| 1025 | யா/சா/9384 | திருமதி. இலட்சுமி கதிரன் |
| 1026 | யா/சா/9406 | திருமதி. கனகம்மா சுப்பிரமணியம் |
| 1027 | யா/சா/9408 | திருமதி.கனகம்மா மயில்வாகனம் |
| 1028 | யா/சா/9409 | திரு. கந்தன் சின்னத்தம்பி |
| 1029 | யா/சா/9448 | திருமதி. இராசம்மா நமசிவாயம் |
| 1030 | யா/சா/9460 | திரு. வேலன் சரவணமுத்து |
| 1031 | யா/சா/9480 | திருமதி. மாணிக்கம் கந்தையா |
| 1032 | யா/சா/9511 | திருமதி. தெய்வானைப்பிள்ளை தாமோதரம்பிள்ளை |
| 1033 | யா/சா/9546 | திரு. சின்னப்பொடி கதிரவேலு |
| 1034 | யா/சா/9560 | திருமதி.இலட்சுமி சின்னத்தம்பி |
| 1035 | யா/சா/9605 | திரு.இளையதம்பி வேலுப்பிள்ளை |
| 1036 | யா/சா/9608 | திரு. வல்லி வைத்திலிங்கம் |
| 1037 | யா/சா/9618 | திரு. செல்லம்மா நடராசா |
| 1038 | யா/சா/9639 | திரு. சாணையன் நாகமுத்தன் |
| 1039 | யா/சா/9653 | திரு. சின்னத்தம்பி முருகேசு |
| 1040 | யா/சா/9659 | திருமதி. சினனம்மா கிட்டிணர் |
| 1041 | யா/சா/9660 | திரு. பெரியதம்பி கணவதிப்பிள்ளை |
| 1042 | யா/சா/9661 | திரு. வைத்திலிங்கம் சண்முகம் |
| 1043 | யா/சா/9664 | திருமதி.செல்வராணி துரையப்பா |
| 1044 | யா/சா/9669 | திரு. நன்னி பொன்னன் |
| 1045 | யா/சா/9689 | திருமதி.பரமேஸ்வரி சோதிலிங்கம் |
| 1046 | யா/சா/9690 | திருமதி.சோதியம்மா சின்னத்தம்பி |
| 1047 | யா/சா/ 9703 | திரு. வயிரவன் செல்லன் |
| 1048 | யா/சா/9707 | திரு. சின்னத்தம்பி சரவணை |
| 1049 | யா/சா/9712 | திரு. நல்லதம்பி சோமசுந்தரம் |
| 1050 | யா/சா/9745 | திருமதி.யோகம்மா சுப்பிரமணியம் |
| 1051 | யா/சா/9757 | திரு. சின்னையா கந்தசாமி |
| 1052 | யா/சா/9759 | திரு. .சின்னப்பு சிவகுரு |
| 1053 | யா/சா/9761 | திரு. இராமு ஆறுமுகம் |
| 1054 | யா/சா/9782 | திரு. நாகமுத்து நாகராசா |
| 1055 | யா/சா/9794 | திரு. காசிநாதர் கந்தையா |
| 1056 | யா/சா/9801 | திரு. கதிரித்தம்பி இராசையா |
| 1057 | யா/சா/9809 | திருமதி. தெய்வானைப்பிள்ளை சின்னத்துரை |
| 1058 | யா/சா/9816 | திருமதி. சின்னாச்சி பொன்னு |
| 1059 | யா/சா/9820 | திரு. சின்னத்தம்பி சரவணை |
| 1060 | யா/சா/9830 | திரு. சின்னப்பெட்டை மயிலன் |
| 1061 | யா/சா/9836 | திரு. பாலசிங்கம் ஜெயசிங்கம் |
| 1062 | யா/சா/9840 | திரு. வினாசி வல்லி |
| 1063 | யா/சா/9865 | திரு. சின்னையா கணேசு |
| 1064 | யா/சா/9885 | திரு.இலங்கையர் சங்கரப்பிள்ளை |
| 1065 | யா/சா/9896 | திரு. முருகப்பர் சின்னத்தம்பி குணரத்தினம் |
| 1066 | யா/சா/9904 | திரு. நாகமுத்து செல்லத்துரை |
| 1067 | யா/சா/9913 | திருமதி. பரமேஸ்வரி சபாபதி |
| 1068 | யா/சா/9919 | திருமதி. வள்ளி சின்னவன் |
| 1069 | யா/சா/9931 | திரு.சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| 1070 | யா/சா/9959 | திருமதி. சீதாலட்சுமி சங்கரப்பிள்ளை |
| 1071 | யா/சா/9960 | திரு. செல்லையா இராசையா |
| 1072 | யா/சா/9985 | திருமதி. அன்னம்மா சரவணை |
| 1073 | யா/சா/9990 | திரு. ஆறுமுகம் செல்லத்துரை |
| 1074 | யா/சா/10000 | திரு. சிவலை இலட்சுமணன் |
| 1075 | யா/சா/10008 | திருமதி. சைவநாயகி அருணாசலம் |
| 1076 | யா/சா/10014 | திருமதி. சற்குணம் சின்னையா |
| 1077 | யா/சா/10017 | திருமதி. இராசம்மா கணபதிப்பிள்ளை |
| 1078 | யா/சா/10020 | திரு. கந்தையா நல்லையா |
| 1079 | யா/சா/10026 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 1080 | யா/சா/10050 | திரு. சின்னவன் பொன்னன் |
| 1081 | யா/சா/10057 | திரு. காத்தான் வைரப்பன் |
| 1082 | யா/சா/10060 | திருமதி. ஆச்சிப்பிள்ளை வைத்திலிங்கம் |
| 1083 | யா/சா/10114 | திரு. சின்னத்தம்பி கந்தவனம் |
| 1084 | யா/சா/10119 | திரு. முருகன் கிட்டிணன் |
| 1085 | யா/சா/10128 | திரு. கட்டையன் சின்னத்தம்பி |
| 1086 | யா/சா/10133 | திரு. பண்டாரி நாகன் |
| 1087 | யா/சா/10136 | திரு. கந்தையா கார்த்திகேசு |
| 1088 | யா/சா/10154 | திரு. காசிநாதர் சின்னத்தம்பி |
| 1089 | யா/சா/10168 | திருமதி.ஆச்சிமுத்து மயில்வாகனம் |
| 1090 | யா/சா/10173 | திரு. சின்னத்தம்பி குமாரசாமி |
| 1091 | யா/சா/10188 | திரு.கணபதிப்பிள்ளை அரசமுடி |

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு
### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | யா/சா/41 | திருமதி.நளாயினி அருணகிரிநாதன் |
| 2 | யா/சா/60 | திரு.பொன்னுத்துரை திருஞானசம்பந்தன் |
| 3 | யா/சா/168 | திரு. கட்டையன் கந்தன் |
| 4 | யா/சா/584 | திருமதி.புவனேஸ்வரி செல்வநாயகம் |
| 5 | யா/சா/601 | திரு. இராசையா பாக்கியநாதன் |
| 6 | யா/சா/615 | திரு. தம்பு நாகராசா |
| 7 | யா/சா/713 | திருமதி.விமலேஸ்வரி சுப்பிரமணியம் |
| 8 | யா/சா/1009 | திரு. வினாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி |
| 9 | யா/சா/1155 | திரு. சின்னையா விசயகுமார் |
| 10 | யா/சா/1212 | திரு. செல்லப்பா இராசரத்தினம் |
| 11 | யா/சா/1354 | செல்வன். பீதாம்பரம் சுகுமார் |
| 12 | யா/சா/1403 | திரு. குமாரவேல் சந்திரசேகரம் |
| 13 | யா/சா/1475 | திரு. முருகேசு கனகசபை |
| 14 | யா/சா/1621 | திருமதி. பரமேஸ்வரி ரூபசிங்கம் |
| 15 | யா/சா/1648 | திருமதி. பத்மாவதி துரைராசா |
| 16 | யா/சா/1696 | திரு. இராசலிங்கம் நாகராசா |
| 17 | யா/சா/1935 | திருமதி. இந்திராணி ஸ்ரீதரன் |
| 18 | யா/சா/2311 | திரு. இளையதம்பி சிவராசமூர்த்தி |
| 19 | யா/சா/2370 | திருமதி. லலிதா இலட்சுமணன் |
| 20 | யா/சா/2383 | திரு. வைத்திலிங்கம் சற்குணநாதன் |
| 21 | யா/சா/2838 | திருமதி. தவமணி தங்கராசா |
| 22 | யா/சா/2981 | திரு. செல்லப்பா பரமேஸ்வரன் |
| 23 | யா/சா/3055 | திருமதி. கமலாம்பிகை வினாசித்தம்பி |
| 24 | யா/சா/3057 | திருமதி. பரமேஸ்வரி மார்க்கண்டு |
| 25 | யா/சா/3154 | திரு. பாலசுந்தரம் சிறிபாலசிங்கம் |
| 26 | யா/சா/3199 | திருமதி. சீதாதேவி சச்சிதானந்தன் |
| 27 | யா/சா/3358 | திரு. பேரம்பலம் சந்திரகாயன் |
| 28 | யா/சா/3415 | திருமதி. சரஸ்வதி யோகராசா |
| 29 | யா/சா/3421 | திரு. வினாசித்தம்பி குணசிங்கம் |
| 30 | யா/சா/3423 | திருமதி. வாரித்தம்பி சிதம்பரம் |
| 31 | யா/சா/3464 | திரு. சுந்தரம் கதிரவேலு |
| 32 | யா/சா/3539 | திரு. ஞானசேகரம் வாரித்தம்பி |
| 33 | யா/சா/3596 | திரு. தம்பு கந்தையா தெய்வேந்திரம் |
| 34 | யா/சா/3626 | திருமதி. இராசம்மா கயிலாயபிள்ளை |
| 35 | யா/சா/3768 | திருமதி. வள்ளிப்பிள்ளை சின்னத்துரை |
| 36 | யா/சா/3836 | திரு. தம்பிஐயா குமாரசாமி |
| 37 | யா/சா/3845 | திரு. சின்னையா அருளம்பலம் |
| 38 | யா/சா/3848 | திரு. சின்னத்தம்பி குமாரசாமி |
| 39 | யா/சா/4284 | திரு. சின்னத்தம்பி செல்லப்பா |
| 40 | யா/சா/4344 | திரு. ஐயம்பிள்ளை சின்னையா |
| 41 | யா/சா/4430 | திரு. கந்தையா யோகரத்தினம் |
| 42 | யா/சா/4539 | திரு. ஆசைப்பிள்ளை பாலசிங்கம் |
| 43 | யா/சா/4623 | திரு. குமார் துரைச்சாமி |
| 44 | யா/சா/4763 | திருமதி. அன்னலட்சுமி சின்னத்துரை |
| 45 | யா/சா/4765 | திருமதி. நந்தினி சுப்பிரமணியம் |
| 46 | யா/சா/4771 | திருமதி. நல்லம்மா ஆனந்தம் |
| 47 | யா/சா/4951 | திரு. வயிரமுத்து திருத்தணிகாசலம் |
| 48 | யா/சா/5282 | திரு. மார்க்கண்டு செல்வரத்தினம் |
| 49 | யா/சா/5362 | திரு. வயிரவன் சின்னத்தம்பி |
| 50 | யா/சா/5468 | திரு. அருமைநாயகம் குருபரன் |
| 51 | யா/சா/5485 | திருமதி. மல்லிகாதேவி செல்வராசா |
| 52 | யா/சா/5561 | திரு. சுப்பிரமணியம் நடராசா |
| 53 | யா/சா/5569 | திருமதி.மீனாம்பிகை செந்தில்நாதன் |
| 54 | யா/சா/5906 | திரு. வல்லி அன்னராசா |
| 55 | யா/சா/5916 | திரு. சடையர் சுப்பிரமணியம் |
| 56 | யா/சா/5989 | திரு. கந்தையா பொன்னம்பலம் |
| 57 | யா/சா/6050 | திருமதி. பராசக்தி சிவசண்முகம் |
| 58 | யா/சா/6221 | திரு. சண்முகம் புஸ்பராசா |
| 59 | யா/சா/6450 | திருமதி. மல்லிகாதேவி வேலாயுதம் |
| 60 | யா/சா/6506 | திரு. சின்னவன் கந்தசாமி |
| 61 | யா/சா/6712 | திரு. கந்தப்பு பாலசுப்பிரமணியம் |
| 62 | யா/சா/6751 | திரு. வேலன் கந்தையா |
| 63 | யா/சா/6906 | திரு. சின்னத்தம்பி கனகசபை |
| 64 | யா/சா/7069 | திரு. நடராசா சிவராஜா |
| 65 | யா/சா/7378 | திரு. சின்னைய்யா கந்தசாமி |
| 66 | யா/சா/7550 | திரு. சின்னத்தம்பி கந்தசாமி |
| 67 | யா/சா/7566 | திரு. வேலுப்பிள்ளை சுரேந்திரா |
| 68 | யா/சா/7595 | திருமதி. இராசம்மா குருநாதர் |
| 69 | யா/சா/7621 | திருமதி. கனகமணி சின்னத்துரை |
| 70 | யா/சா/7806 | திருமதி. பொன்மணி சிவராசா |
| 71 | யா/சா/7901 | திரு. அருணாசலம் தில்லைநாயகர் |
| 72 | யா/சா/7995 | திரு.வைத்திலிங்கம் சிதம்பரப்பிள்ளை |
| 73 | யா/சா/8178 | திரு. இளையதம்பி சுந்தரலிங்கம் |
| 74 | யா/சா/8278 | திரு. முத்து தில்லையம்பலம் |
| 75 | யா/சா/8359 | திரு. சின்னப்பு கணேசலிங்கம் |
| 76 | யா/சா/8426 | திருமதி. விக்டோறியா இமானுவல் |
| 77 | யா/சா/8484 | திரு. திசைவீரசிங்கம் தருமரத்தினம் |
| 78 | யா/சா/8695 | திரு. தர்மலிங்கம் சந்தணராசா |
| 79 | யா/சா/9076 | திரு. முத்து கந்தவனம் |
| 80 | யா/சா/9120 | திருமதி. புனிதநந்தினி ஜெயராசா |
| 81 | யா/சா/9328 | திரு. கந்தசாமி தயாபரன் |
| 82 | யா/சா/9343 | திரு. நாகர் சிவலிங்கம் |
| 83 | யா/சா/9353 | திரு. சுவாம்பிள்ளை இராசரத்தினம் |
| 84 | யா/சா/9369 | திரு. பொன்னையா செல்வரத்தினம் |
| 85 | யா/சா/9379 | திரு. வேலுப்பிள்ளை சின்னப்பு |
| 86 | யா/சா/9424 | திரு.கனகசுந்தரம் கணபதிப்பிள்ளை |
| 87 | யா/சா/9507 | திரு. வேலுப்பிள்ளை துரைராசன் |
| 88 | யா/சா/9538 | திரு. சின்னப்பு செல்லத்துரை |
| 89 | யா/சா/9651 | திரு. வேலுப்பிள்ளை இரத்தினராசா |
| 90 | யா/சா/9700 | திரு. கணபதிப்பிள்ளை மகேந்திரராசா |
| 91 | யா/சா/9733 | திருமதி. பத்மலோசினி ரவிச்சந்திரன் |
| 92 | யா/சா/9793 | திரு. அருளானந்தம் கணேந்திரன் |
| 93 | யா/சா/9833 | திருமதி. தங்கமணி சின்னத்தம்பி |
| 94 | யா/சா/9844 | திருமதி. யோகம்மா வினாசித்தம்பி |
| 95 | யா/சா/9857 | திரு. விசுவலிங்கம் சிவானந்தன் |
| 96 | யா/சா/9893 | திரு. வேலுப்பிள்ளை மாணிக்கம் |
| 97 | யா/சா/9963 | திரு. மயிலன் நடேசபிள்ளை |
| 98 | யா/சா/9997 | திரு. மாதன் தம்பிஐயா |
| 99 | யா/சா/10002 | திரு.இராசையா பாலசுப்பிரமணியம் |
| 100 | யா/சா/10034 | திரு. மயில்வாகனம் சிறிதரன் |
| 101 | யா/சா/10073 | செல்வி. இரமணிசியாமா நடராசா |
| 102 | யா/சா/10092 | திரு. கந்தன் இளையவன் |
| 103 | யா/சா/10219 | திரு. பரமானந்தர் அம்பாலவாணபிள்ளை |

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்படிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | யா/கா/40 | திரு. ஆறுமுகம் இராசநாயகம் |
| 2 | யா/கா/61 | திரு. சண்முகம் பேரம்பலம் |
| 3 | யா/கா/63 | திருமதி. இராஜராஜேஸ்வரி பொன்னையா |
| 4 | யா/கா/66 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 5 | யா/கா/71 | திருமதி. தவமணி மகாதேவா |
| 6 | யா/கா/77 | திரு.சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி |
| 7 | யா/கா/99 | திருமதி. செல்லாச்சி இராசையா |
| 8 | யா/கா/107 | திரு. சங்கரப்பிள்ளை தில்லையம்பலம் |
| 9 | யா/கா/108 | திரு. முத்தையா பரமநாதன் |
| 10 | யா/கா/152 | திரு. முருகர் வைரமுத்து |
| 11 | யா/கா/155 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| 12 | யா/கா/156 | திரு. ஆறுமுகம் சிற்றம்பலம் |
| 13 | யா/கா/163 | திரு. நாகமுத்து நடராசா |
| 14 | யா/கா/164 | திருமதி. பரமேஸ்வரி நமசிவாயம் |
| 15 | யா/கா/167 | திரு. முருகேசு சின்னத்துரை |
| 16 | யா/கா/179 | திரு. இராசையா செல்லத்துரை |
| 17 | யா/கா/184 | திரு. கந்தையா சிவஞானம் |
| 18 | யா/கா/187 | திருமதி. ரோகணிஅம்மா கணேசபிள்ளை |
| 19 | யா/கா/203 | திருமதி. பரிமளம் செல்லத்துரை |
| 20 | யா/கா/212 | திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு |
| 21 | யா/கா/221 | திரு. தம்பிப்பிள்ளை முருகேசு |
| 22 | யா/கா/224 | திரு. கார்த்திகேசு நாகேந்திரம் |
| 23 | யா/கா/234 | திரு.தம்பர் காசிப்பிள்ளை முருகேசு |
| 24 | யா/கா/251 | திரு. சபாபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| 25 | யா/கா/259 | திருமதி. நீலாவதி துரைராஜசிங்கம் |
| 26 | யா/கா/267 | திருமதி. அமுதம் தர்மலிங்கம் |
| 27 | யா/கா/276 | திருமதி.பாக்கியம் இராசதுரைசிங்கம் |
| 28 | யா/கா/284 | திருமதி. சிவசோதி இரத்தினசிங்கம் |
| 29 | யா/கா/293 | திருமதி. மனோண்மணி நல்லதம்பி |
| 30 | யா/கா/301 | திரு.குமாரவேல்பிள்ளை நமசிவாயம் |
| 31 | யா/கா/302 | திரு. சங்கரப்பிள்ளை சேனாதிராசா |
| 32 | யா/கா/329 | திரு. நமசிவாயம் குமாரசாமி |
| 33 | யா/கா/331 | திரு. கந்தையா பாலசிங்கம் |
| 34 | யா/கா/336 | செல்வி. மகேஸ்வரி ஆறுமுகம் |
| 35 | யா/கா/340 | திரு. கந்தையா கனகசபை |
| 36 | யா/கா/342 | திரு. கந்தையா கிருஷ்ணதாஸ் |
| 37 | யா/கா/346 | திருமதி. பரமேஸ்வரி செல்வநாயகம்பிள்ளை |
| 38 | யா/கா/348 | திருமதி. கோமதி நாகேந்திரம் |
| 39 | யா/கா/354 | திருமதி. முத்தம்மா சுப்பிரமணியம் |
| 40 | யா/கா/361 | திரு. குமாரு வேலுப்பிள்ளை |
| 41 | யா/கா/363 | திரு. கணபதிப்பிள்ளை நல்லையா |
| 42 | யா/கா/376 | திரு. நாகமுத்து நாகலிங்கம் |
| 43 | யா/கா/377 | திருமதி. சரஸ்வதி திருநாவுக்கரசு |
| 44 | யா/கா/381 | திரு. சிவகுரு கந்தையா |
| 45 | யா/கா/393 | திரு.விஸ்வநாதஐயர் மகாதேவசர்மா |
| 46 | யா/கா/394 | திரு.பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை |
| 47 | யா/கா/395 | திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் |
| 48 | யா/கா/408 | திருமதி. பார்வதி சேனாதிராசா |
| 49 | யா/கா/413 | திருமதி.சின்னாச்சிப்பிள்ளை கதிரவேலு |
| 50 | யா/கா/417 | திரு. வேலுப்பிள்ளை நடராசா |
| 51 | யா/கா/418 | திரு. கணபதிப்பிள்ளை கார்த்திகேசு நடராசா |
| 52 | யா/கா/443 | திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம் |
| 53 | யா/கா/450 | திருமதி. பராசக்தி சோமசுந்தரம் |
| 54 | யா/கா/458 | திரு. தில்லையம்பலம் சிவசம்பு |
| 55 | யா/கா/463 | திரு. கதிரன் சுப்பன் |
| 56 | யா/கா/467 | திரு. அப்புத்துரை கிருஸ்ணபிள்ளை |
| 57 | யா/கா/476 | திருமதி. கனகம்மா பொன்னம்பலம் |
| 58 | யா/கா/481 | திரு. கணபதிப்பிள்ளை இந்திரன் |
| 59 | யா/கா/491 | திருமதி.பார்வதி பாலசுப்பிரமணியம் |

(தொடரும்)

# கட்டுநாயக்காவில் பேச்சு நடத்தும்...

நேற்றைய சந்திப்பில் இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது -

கண்காணிப்புக்குழுத் தலைவரும் அவரது அணியினரும் நேற்று வந்திருந்தனர். இப்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலைகள் குறித்து முக்கிய விடயமாக விவாதிக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் எங்கள் அரசியற்துறைப் போராளிகள் மீதும் அரசியற் துறை அலுவலகங்கள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பல போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையில் எமது தலைமைப்பீடம் ஒரு தீர்க்கமான முடிவெடுத்திருக்கிறது.

எமது அரசியற்துறைப் போராளிகள் தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அரசியல் பணிகளை மேற்கொள்ளலாம் என்பதும், அப்பகுதிகளில் சுதந்திரமாகத் தங்கள் மக்களுடன் இணைந்து செயற்படலாம் என்பதும் போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், அண்மைக் காலமாக இது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது; அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டது. இதையடுத்து எமது நிர்வாகப் பகுதிக்குள் எமது போராளிகளை மீள வரவழைத்திருக்கிறோம்.

பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் எமது போராளிகள் அந்தப் பகுதிகளில் அரசியல் பணிகளை மேற்கொள்வது சாத்தியமில்லை. ஆகவே, எமது அரசியல் அலுவலகங்களை மூடிவிட்டு எமது போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பின்னகர்த்தியுள்ளோம்.

எமது தலைமைப்பீடத்தின் முடிவை கண்காணிப்புக் குழுவுக்கு எடுத்து விளக்கியதே இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது.

அதேபோல் யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வந்த செய்திகளின் அடிப்படையில் எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடும் கண்காணிப்புக் குழுவிடம் விளக்கப்பட்டது.

கொழும்பு உள்ளிட்ட அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பேச்சுக்களை நடத்துவது சாத்தியமில்லை என்று தெரிவித்திருக்கிறோம். கிளிநொச்சி அல்லது வேறு ஏதேனும் ஒரு நடுநிலையான நாட்டில் பேச்சுக்கள் நடத்தலாம் என்று தெரிவித்திருந்தோம்.

இந்த நிலையில் நோர்வே ஒரு யோசனையை முன்வைத்துள்ளது. நோர்வே முன்வைத்துள்ள யோசனையில் உள்ள சிக்கல்கள், நெருக்கடிகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

பேச்சுக்களுக்கு நாங்கள் வெளிநாட்டிற்குச் செல்லும்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்துச் செல்வதால் அதை பாதுகாப்பான இடமாக நோர்வே குறிப்பிட்டிருந்தது.

போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்கிறபோது தரித்துச் செல்வதென்பது வேறு, பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான உகந்த சூழல் என்பது வேறு.

இரு முரண்பாடுகளுடைய தரப்புக்கள் ஒரு பேச்சுவார்த்தையை நடத்துகிறபோது இயல்பான சூழலில் நடைபெறவேண்டும்.

நெருக்குவாரங்கள், பதற்றங்கள் உள்ள இடங்களைத் தவிர்ப்பது என்பது உலக நடைமுறையாக இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் மூன்றாம் நிலை நாடுகளில் ஏதாவது ஒரு இடத்தில் பேச்சுக்களை முன்னெடுப்பது என்பது வழமை.

இலங்கையின் தலைநகரைப் பொறுத்தவரையில் அது கொழும்பாக இருக்கலாம், கட்டுநாயக்க விமான நிலையமாகவும் இருக்கலாம், அங்கே இப்போது ஒரு பதற்றமான சூழ்நிலை இருக்கிறது. அரசியல் குழப்பங்களும் பதற்றங்களுமுள்ள ஒரு இடத்தில் போய் பேச்சுக்களை இயல்பாக முன்னெடுக்க முடியாது.

இந்த அடிப்படையிலேயே எமது நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக விளக்கினோம். அதே நேரத்தில் போர்நிறுத்தத்தைச் செயற்படுத்துவது குறித்து விரைவில் பேசவேண்டிய அவசியத்தையும் நாம் வலியுறுத்தி இருக்கிறோம் .

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ பேச்சுக்கள் நடத்தப்படுவது என்பதை இருதரப்பும் ஏற்காத நிலையில் நடுநிலைமையிலான ஒரு மூன்றாம் தரப்பின் இடம்தான் பொருத்தமானது என்பதை சுட்டிக்காட்டினோம்.

இரண்டு தரப்பும் ஏற்கக் கூடிய யோசனையாக இதை எமது தலைமைப்பீடத்தின் சார்பில் முன்வைத்துள்ளோம். நோர்வே தரப்பிடமும் தெரிவித்துள்ளோம்.

அரச தரப்பு நோர்வேயின் ஒஸ்லோவை நிராகரித்தாலும் வேறு ஏதாவது ஒரு நடுநிலைமையான நாட்டில் இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்வைக்கலாம்.

இரண்டு தரப்புக்குமே பக்கச்சார்பற்ற நிலையை எடுக்க வேண்டும் என்று நோர்வேத் தரப்பை நாம் கேட்டிருக்கிறோம் .

*கேள்வி : தற்போதைய சூழலுக்குத் தீர்வு காணும் யோசனைகள் கொண்டு வரப்பட்டனவா?*

பதில் : எந்தவிதமான யோசனையையும் அவர்கள் கொண்டு வரவில்லை. அண்மைக் காலமாக எங்களுடைய போராளிகள் தொடர்ந்தும் நாளாந்தம் தாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். எங்களுடைய அரசியற்துறை பணிமனைகள் மீது குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலைமையைச் சீர்செய்யாமல் முக்கியமான எந்த மாற்றமும் வரப்போவதில்லை. இந்தத் தீவிரத் தன்மையை அரசு தரப்பு உணர்ந்து ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

அண்மையில் கருணா குழுவை கண்காணிப்புக் குழு சந்தித்ததாக செய்திகள் வெளியானது. இது குறித்து நாம் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டோம்.அவர்களும் அப்படியான ஒரு சிலரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சந்தித்ததாகவும், இந்தக் குழுக்கள் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லை என்றும் தங்கள் பாதுகாப்பில் இல்லை என்றும் சொல்லிவருகின்ற இலங்கை அரசாங்கத்திற்கு ஆதாரத்துடன் விளக்குவதற்காகத்தான் இச்சந்திப்பு என்றும் தெரிவித்தனர்.

ஆயுதக்குழுக்களை அரச தரப்பும் படைத் தரப்பும் ஒழுங்கமைத்து வைத்து இயக்கிக் கொண்டிருப்பது இப்போது உலகறிந்த உண்மையாக வெளிப்பட்டிருக்கிறது. இதன் மூலம் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்கூட தகர்த்தெறியப்படக்கூடிய நிலைமைதான் உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு வெளியேற்றப்படவேண்டும் என்பது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

ஆனால், இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை மீறி ஆயுதக்குழுக்களை மறைமுகமாக ஆதரித்து, போர்நிறுத்த ஒப்பந்தத்தை நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பது தெளிவாயிருக்கிறது. இந்த ஆயுதக் குழுக்களைத் தங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம்தான் தொடர்ச்சியான குழப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. அப்பிரதேசங்களில் நடைபெறும் படுகொலைகளுக்கு இந்தக் குழுக்கள்தான் காரணம் என்பது இப்போது ஆதாரத்தோடு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையும், ஈடுபாடும் அதிகமாக இருப்பதால் இங்குள்ள நிலைமைகளை, தீவிரத்தன்மைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

அந்த அடிப்படையில்தான் தற்போதைய சூழ்நிலையையும் சர்வதேச சமூகத்திடம் எடுத்து விளக்கி இருக்கிறோம்.

இந்தச் சூழலை விளக்கியதன் மூலம் இலங்கை அரச தரப்பிடம் எடுத்துக்கூறி, ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய கட்டத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணியை அவர்கள் செய்வார்கள் என்று தற்போது நம்புகிறோம்.

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமெனில் இரு தரப்பும் அவசியம் சந்தித்துப் பேசியாக வேண்டும்.

அமைதி, சமாதான முயற்சி உள்ளிட்ட அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது போர் நிறுத்த ஒப்பந்தம். அதனால், போர் நிறுத்தம் அமுலாக்கம் என்பது மிக மிக முக்கியமானது.

ஆகவே, இரு தரப்பின் உயர்நிலைக் குழுக்களும் பேசி ஒரு உறுதியான தீர்மானத்துக்கு வரவேண்டும். இந்தத் தீர்மானங்களைச் செயற்படுத்துவதன் மூலம்தான் எந்தவிதமான மாற்றத்தையும் இங்கே கொண்டுவர முடியும். இதற்காக அனுசரணையாளர்கள் தீவிரமாகச் செயற்படவேண்டும். செயற்படுகிறார்கள் என்று நாம் நம்புகிறோம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் இப்போது கேள்விக்குறியான நிலைக்கு வந்துள்ளதால்தான் இந்தச் சந்திப்பும், ஒரு உறுதியான தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகியிருக்கிறது.

இலங்கை அரசுக்கு போர் நிறுத்த ஒப்பந்தம், அமைதி முயற்சிகள் நீடிக்கவேண்டும் என்ற அர்ப்பணிப்பு இருக்குமேயானால் போர் நிறுத்தம் நீடிக்கும். நினைப்பது எல்லாம் நடந்துவிடுவதில்லை. அது இரு தரப்பினரதும் கைகளில்தான் உள்ளது.

எங்களுடைய ஒரு தரப்பின் நம்பிக்கையை வைத்துக்கொண்டு எதையும் நாம் எளிதில் கூறல் இயலாது.

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பெரிதுபடுத்தவில்லை. ஏனெனில், மாறிமாறி வந்த சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதைச் செய்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

தமிழ் மக்களின் வாக்கு வங்கிகளைப் பெறுவதைவிட, தமிழ் மக்களுக்கு எதிராக எப்படியான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்ற இனவாதக் கருத்துக்களைத்தான் அண்மைக்காலமாக சிங்கள மக்களிடத்திலே அவர்கள் கூறிவருகிறார்கள்.

எங்கள் மக்கள் ஏற்கனவே தங்கள் முடிவை மேற்கொண்டுவிட்டார்கள்.

எங்கள் சொந்த தாயகத்தில் தன்னாட்சி உரிமையோடு வாழ வேண்டும் என்பது எங்கள் மக்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற தீர்மானம்.

அதனால், அவர்கள் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்க் கட்சிகளுடன் ஆலோசனை செய்வது என்ற மலையக மக்கள் முன்னணித் தலைவரின் கருத்து பத்திரிகைகளின் வாயிலாக வெளிவந்திருக்கிறது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் இலங்கை அரசியல் யாப்பு, அரசியல் சட்டங்கள் அனைத்தும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சிங்கள தேசத்திலே வாழ்கின்ற தமிழர்களுக்காகச் சில அரசியல் நகர்வுகளுக்கான முடிவுகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் விரைவில் ஆலோசனை நடத்தி உரிய முடிவெடுக்கப்படும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

# மாகாணமட்ட விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டத்திலிருந்து வெற்றிபெற்றோர்!

**வடக்கு - கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பத்தாவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகளில் - யாழ். மாவட்ட பாடசாலைகள் மற்றும் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்கள் வருமாறு :**

## பெண்கள்

### 15 வயதுப் பிரிவு

வலைப்பந்தாட்டம் (சம்பியன்) :
யூனியன் கல்லூரி
சதுரங்கப் போட்டி :
வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை (இரண்டாமிடம்),
நெல்லியடி மத்திய கல்லூரி (மூன்றாமிடம்)
நீளம் பாய்தல் (நான்காமிடம்) :
வை.தீபிகா (வட்டு. இந்துக் கல்லூரி)
தட்டெறிதல் (நான்காமிடம்) :
ரி.மேகலா (விக்ரோறியாக் கல்லூரி)
ஈட்டியெறிதல் (முதலாமிடம்) :
என்.சுபாசினி (மகாஜனக் கல்லூரி)
குண்டெறிதல் (மூன்றாமிடம்) :
என்.மைதிலி (வட்டு. மத்திய கல்லூரி)
100 மீற்றர் (முதலாமிடம்):
ஆர்.சோபினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

### 17வயதுப் பிரிவு

வலைப்பந்தாட்டம் :
உடுவில் மகளிர் கல்லூரி (சம்பியன்),
யூனியன் கல்லூரி (இரண்டாமிடம்)
4 X 100 (மூன்றாமிடம்) :
யூனியன் கல்லூரி
உயரம் பாய்தல் (முதலாமிடம்) :
வி.கஜீதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
200 மீற்றர் (நான்காமிடம்) :
வி.சுமங்கலி (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்)
1500 மீற்றர் ( மூன்றாமிடம்) :
எஸ். திருமகள் (யூனியன் கல்லூரி)
ஈட்டி எறிதல் (இரண்டாமிடம்) :
ரி.கோதம்பை (மகாஜனாக் கல்லூரி)
100 மீற்றர் (இரண்டாமிடம்) :
ஆர். வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)
200 மீற்றர் (மூன்றாமிடம்) :
ஆர்.வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)
100 மீற்றர் தடைதாண்டல் (முதலாமிடம்) :
ஆர். வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)
100 மீற்றர் தடைதாண்டல் (இரண்டாமிடம்) :
எஸ். சுதர்சினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை)
800 மீற்றர் (இரண்டாமிடம்)
எஸ்.ஜெயபவானி (யாழ்ப்பாணக் கல்லூரி)

### 19 வயதுப் பிரிவு

உடற்பயிற்சி (மூன்றாமிடம்) :
மானிப்பாய் மகளிர் கல்லூரி
வலைப்பந்தாட்டம் (சம்பியன்) :
யூனியன் கல்லூரி
சதுரங்கப்போட்டி (சம்பியன்)
வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை
பூப்பந்தாட்டம் (சம்பியன்) :
உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்
பூப்பந்தாட்டம் (இரண்டாமிடம்) :
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
மேசைப்பந்தாட்டம் (இரண்டாமிடம்) :
வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை
கூடைப்பந்தாட்டம் :
கொக்குவில் இந்துக் கல்லூரி (சம்பியன்)
உடுவில் மகளிர் கல்லூரி (இரண்டாமிடம்)
400 மீற்றர் (மூன்றாமிடம்) :
எஸ்.யாழினி (இராமநாதன் மகளிர் கல்லூரி)
800 மீற்றர் (நான்காமிடம்) :
எஸ்.யாழினி - (இராமநாதன் மகளிர் கல்லூரி)
1500 மீற்றர் (முதலாமிடம்) :
ஆர். அனுஷியா - வரணி மகா வித்தியாலயம்
3000 மீற்றர் ( மூன்றாமிடம்) :
ஆர்.அனுஷியா - (வரணி மகா வித்தியாலயம்)
1500 மீற்றர் (நான்காமிடம்) :
கே.திருவேணி (யாழ்ப்பாணக் கல்லூரி)
100 மீற்றர் தடை தாண்டல் (இரண்டாமிடம்):
பி.மயூரி (திருக்குடும்பக் கன்னியர் மடம்)
400 மீற்றர் தடை தாண்டல் (மூன்றாமிடம்):
எம்.றொசானி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
நீளம் பாய்தல் (இரண்டாமிடம்) :
எம்.றொசானி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
உயரம் பாய்தல் (இரண்டாமிடம்) :
ரி.நுஜந்திகா - அராலி இந்துக் கல்லூரி
குண்டெறிதல் (முதலாமிடம்) :
கே.கீர்த்தனா - யூனியன் கல்லூரி
குண்டெறிதல் (இரண்டாமிடம்) :
கே.சேதுப்பிரியா (மகாஜனாக் கல்லூரி)
தட்டெறிதல் (முதலாமிடம்) :
கே.சேதுப்பிரியா (மகாஜனாக் கல்லூரி)
ஈட்டியெறிதல் (இரண்டாமிடம்) :
கே.சேதுப்பிரியா (மகாஜனாக் கல்லூரி)
தட்டெறிதல் (இரண்டாமிடம் ) :
ஹொன்சிலி மேரி அந்தோனி டேவிட் (அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி)
ஈட்டியெறிதல் (நான்காமிடம்) :
ஏ.கீதாஞ்சலி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

### 21வயதுப் பிரிவு

4 X 100 மீற்றர் (நான்காமிடம்) :
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
200 மீற்றர் (மூன்றாமிடம்) :
பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)
400 மீற்றர் (இரண்டாமிடம்) :
பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)
800 மீற்றர் (இரண்டாமிடம்) :
பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)
3000 மீற்றர் :
எஸ்.கிருஷாந்தினி - இரண்டாமிடம் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)
பி.கலைமகள் - நான்காமிடம் (தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்)
100 மீற்றர் தடை தாண்டல் (முதலாமிடம்) :
ஏ.ஹிஷானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
400 மீற்றர் தடைதாண்டல் (முதலாமிடம்) :
எஸ்.நிருஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
நீளம்பாய்தல் (மூன்றாமிடம்) :
எம். செல்வகுமாரி (கொடிகாமம் அ.த.க. பாடசாலை)
உயரம்பாய்தல் (2 ஆம் இடம்) :
ஏ.சலிமிவாசமுகி (அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி)
குண்டெறிதல் (முதலாமிடம்) :
கே.தர்ஷினி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)
தட்டெறிதல் (முதலாமிடம்) :
கே.தர்ஷினி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

## ஆண்கள்

### 15 வயதுப் பிரிவு

4 x 100 மீற்றர் (மூன்றாமிடம்) :
சென். பற்றிக்ஸ் கல்லூரி
கரப்பந்தாட்டம் (இரண்டாமிடம்) :
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
சதுரங்கப் போட்டி :
யாழ். இந்துக் கல்லூரி (சம்பியன்)
ஹாட்லிக் கல்லூரி (இரண்டாமிடம்)
நீளம் பாய்தல் (நான்காமிடம்):
எம். கஜேந்திரா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)
100 மீற்றர் தடைதாண்டல் (மூன்றாமிடம்) :
பி.நிரோஷன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)
உயரம் பாய்தல் (முதலாமிடம்) :
பி.பாலசங்கர் (யாழ். மத்திய கல்லூரி)
உயரம் பாய்தல் (மூன்றாமிடம்) :
யு.ராகுல் (நல்லூர் சி.சி.த.க. பாடசாலை),
குண்டெறிதல் (நான்காமிடம்):
வி.ஹரிகரன் (ஹாட்லிக் கல்லூரி)
தட்டெறிதல் (நான்காமிடம்) :
வி.ஹரிகரன் (ஹாட்லிக் கல்லூரி)
ஈட்டியெறிதல் (இரண்டாமிடம்) :
ஜே.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி)

(மிகுதி நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பி. உடன்படிக்கையால் மீண்டும் யுத்தம் ஏற்படாதாம்!

## பிரதமர் மஹிந்த சொல்கிறார்

கொழும்பு —

ஜே.வி.பியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் நாட்டிற்கு சமாதானமும் சுபீட்சமும் அபிவிருத்தியும் ஏற்படும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜே.வி.பி. விதித்திருக்கும் 12 நிபந்தனைகளைஏற்கும்புரிந்துணர்வுஉடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த உடன்படிக்கையின் மூலம் மீண்டும் யுத்தம் ஏற்படப்போவதாக சிலர் கூறிவருகின்றனர். எனினும், இந்த உடன்படிக்கையால் யுத்தம் மீண்டும் மூளாது. மாறாக நாட்டிற்கு சமாதானமும் சுபீட்சமும் அபிவிருத்தியும் கிட்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு காணப்படும் தீர்வானது - நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும் என்பதையே உடன்படிக்கை எடுத்துக்கூறுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச கருத்துத் தெரிவிக்கையில் - நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. அதேநேரம் யுத்தத்திற்கு அஞ்சவும் இல்லை. யுத்தத்துக்கு அஞ்சிக்கொண்டு சமாதானத்தை கொண்டுவர முடியாது எனத் தெரிவித்தார்.

# கதிர்காமர் கொலை தொடர்பாக கைதான 27 பேரும் விடுதலை!

கொழும்பு —

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 27 தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் அமைச்சரின் கொலையுடன் தொடர்புடையவர்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்ட போதிலும், அவர்களிடமிருந்து எவ்வித தகவலும் பெறமுடியாத காரணத்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என இரகசியப் பொலிஸார் நீதிவான் நீதிமன்றுக்கு தெரிவித்தனர்.

தொழில் நிமித்தமாக பிற மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வந்து தங்கியுள்ள தமிழ் இளைஞர்களும் மற்றும் பொரளை, தெகியோவிட்ட பகுதிகளில் வசித்த தமிழ் இளைஞர்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக சப் இன்ஸ்பெக்டர் குமாரசிங்க தெரிவித்தார்.

இவர்கள் அனைவரையும் அறிவித்தால் நீதிமன்றுக்கு சமுகமளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடனேயே விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# மூன்று தமிழ் இளைஞர்கள் கொழும்பு நகரில் கைது!

கொழும்பு —

கொழும்பில் மூன்று தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்கள் வந்த ஓட்டோவும் கைப்பற்றப்பட்டது. இந்த இளைஞர்களிடமிருந்து 40 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள், பணம் மற்றும் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - ஆமர் வீதியில் நேற்று முன்தினம் காலை விசேட அதிரடிப் படையின் விசேட நடவடிக்கைப் பிரிவால் இந்த மூன்று இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இம் மூவரிடமிருந்தும் 40 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின், 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், பண நோட்டுக்கள், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் கிரனேட் ஒன்றும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு பாதாள உலக குழுவுடன் தொடர்புடையவர்களாக கருதப்படும் இம்மூன்று இளைஞர்களும் விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

## கண்காணிப்பு...

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார்.

பின்னர் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இக்குழுவினர் பேச்சுக்களை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் பேச்சுக்களின் போது உடனிருந்தனர்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து போராளிகள் மீளப் பெறப்பட்டுள்ளமை, கட்டுநாயக்க விமான தளத்தில் அமைதிப் பேச்சுக்கள் தொடங்குதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒஸ்லோ...

ஜே.வி.பிக்கும் இடையே இணக்கப்பாடு காணப்பட்டுள்ள 12 நிபந்தனைகளில் 10 நிபந்தனைகள் யுத்தத்தை மீண்டும் ஏற்படுத்தக் கூடியவை. இந்த 12 நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தினால் ஜனாதிபதியாக நியமனமாகும் ஒருவரால் கூட யுத்தத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

இந்த நிபந்தனைகளால் அரும்பாடுபட்டு நிறுத்தி வைத்துள்ள யுத்தம் மீண்டும் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ பிரகடனங்கள் சமாதானத்துக்கான அடித்தளங்களைப் போட்டிருந்தது. அதனை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதை நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரோந்து...

திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 05 பொதுமக்கள் காயமடைந்தனர்.

கல் ஏற்றிவந்த வான் ஒன்றில் வந்த சாரதியான அம்பாறையைச் சேர்ந்த சமன் குமார (வயது 40), ஹேரத் (வயது 35) ஆகியோரும் காயமடைந்தோரில் உள்ளடங்குகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து மண்முனைப் பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு கள்ளப்பாடு ப.நோ.கூ சங்கத்தருகே காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இந்தச் சம்பவத்தில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

# மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் அடையாளம் காணப்பட்டார்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - ஊறணி சந்திப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்த இளைஞர் குறிஞ்சாமுனை கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலேஸ்வரன் (வயது 38) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவருடன் கூடச் சென்ற மட்டக்களப்பு - மாமாங்கத்தைச் சேர்ந்த சிங்காரரட்ணம் கமலச்சந்திரன் (வயது 34) கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவரிடமிருந்து கிரனேட் ஒன்று மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கூட்டணிக் கட்சிகள் இணைந்து கொள்கைப் பிரகடனம் தயாரிப்பு!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாட்டுக்கு சமர்ப்பிக்கவுள்ள கொள்கைப் பிரகடனம் பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மூலம் தயாரிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கடந்த ஆறாம் திகதி இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் கூடி கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்கும் குழுவுக்கு - கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியை நியமிப்பதெனத் தீர்மானித்தனர்.

பிரதமரின் தலைமையில் கடந்த ஆறாம் திகதி இரவு 9 மணிக்கு கூடிய இந்தக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# மலையக மக்கள் முன்னணி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க மலையக மக்கள் முன்னணி முடிவுசெய்துள்ளது.

மலையக மக்கள் முன்னணி யின் தலைவர் பெ.சந்திரசேகரனின் தலைமையில் நடைபெற்ற கட்சியின் தேசிய சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவரு கிறது.

இந்த வார இறுதியில் இது தொடர்பாக உத்தியோகபூர்வ முடிவை பெ. சந்திரசேகரன் வெளியிடவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# கருணா குழு உறுப்பினர்...

கிழக்கைச் சேர்ந்த றெஜி னோல்ட் சில்வா (வயது 29) என்ற இளைஞரை சுட்டுவிட்டுத் தப்பிச்செல்ல முயன்றவர் மீது அந்தப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிதாரியான - கருணாகுழுவைச் சேர்ந்த பன்குடாவெளியைச் சேர்ந்த இராசலிங்கம் சிவலோகநாதன் (வயது 28) என்ற இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவர் கருணாகுழு உறுப்பினர் என்றும் அவரிடமிருந்து 9 மி.மீ. பிஸ்டல் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபரால் சுடப்பட்ட றெஜினோல்ட் சில்வா என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

மரணவிசாரணையை ஒத்தி வைத்த அவர் - உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறும் இல்லையேல் 24 மணிநேரத்தின் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவரின் உறவினர்கள் நேற்று மாலை சடலத்தை அடையாளம் கண்டு பொறுப்பேற்றனர்.

இதனிடையே நேற்றுக்காலை 10.15 மணியளவில் மாமாங்கம் இராணுவ நிலையொன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ள போதிலும் அது வெடிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - சிங்கள வாடியில் எஸ்.மகேஸ்வரராஜா (முதுமான நிறுவனம் ஒன்றின் விநியோகஸ்தர்) என்பவரது வீடு - செவ்வாய்க்கிழமை இரவு கிளைமோர் குண்டு வெடிக்கச் செய்யப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இந்த வீடு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்எனக் கருதப்படும் இவர் - சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுடப்பட்டுக் காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாராலும் இராணுவத்தினராலும் நேற்றுமுன்தினம் பிற்பகல் வாழைச்சேனையைச் சேர்ந்த மீனவர்களான கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் (வயது 32), கல்குடாவைச் சேர்ந்த மூர்த்தி சுதர்சன் (வயது 18) ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# விமானத்தில்...

மேலும் சுமார் 75 பேர் வரை காயமடைந்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 1.50 மணியளவில் சவூதி எயார் நிறுவனத்துக்குச் சொந்தமான - போயிங் 707 எயர் பஸ் விமானம் றியாத் நோக்கிப் புறப்பட்டது.

430 பயணிகள் மற்றும் 20 விமான சிப்பந்திகளுடன் புறப்பட்ட இந்த விமானம் மேலெழும்புத் தயாரானபோது - கட்டுப்பாட்டு அறையிலிருந்து விமானிக்கு அவசரமாகத் தொலைபேசி அழைப்பு வந்தது.

விமானத்தில் குண்டுவைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்திருப்பதால் விமானத்தை உடனடியாக நிறுத்தும்படி கேட்கப்பட்டதை அடுத்து விமானி அவசர அவசரமாக விமானத்தை நிறுத்தினார்.

உடனடியாக விமானத்திலிருந்த பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். அப்போது விமானத்தில் அவசரகாலத்தில் பயன்படுத்தும் கதவு உடைந்து வீழ்ந்ததில் முஸ்லிம் பெண்ணொருவர் பலியானார்.

மேலும் 75 பேர்வரை காயமடைந்தனர். இவர்களில் 15 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் ஆறு பேர் நீர்கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினரும் பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் விமானத்தைச் சுற்றி குவிக்கப்பட்டதுடன் வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவினர் விமானத்தில் தேடுதல் நடத்தினர்.

எனினும் இந்தத் தேடுதலின்போது குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதையடுத்து குண்டு பற்றிக் கிடைத்த தகவல் வெறும் புரளி என்று தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தால் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து விமானங்கள் புறப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்

### திரு சதீஸ்குமார் (கண்ணன்)

DR.K.S.பரம்சோதிநாதர், பேரின்பலக்ஷ்மி தம்பதிகளின் புதல்வன் திரு.சதீஸ்குமார் (கண்ணன்) அவர்கள் 07.09.2005 புதன் கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் 09.09.2005 வெள்ளிக்கிழமை இன்று பி.ப. 4.30 மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்
அக்கா - பிரியதர்ஷினி (வதனி)
(இ) தம்பி - வினோத்குமார்

DAY CLASS
A/L - 2006
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
செப்ரெம்பர்– 12 (திங்கள்)
காலை 8.30 மணிக்கு
DMI
Jaffna
[C/4573]

A/L DAY CLASS
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
ஆரம்பம் :- 12.09.2005 (திங்கள்)
காலை 8.00 மணி (பழையநேரம்)
D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
[C/4572]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.